E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 ஜூன் 11 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

1932 - 2022

வரு. 90 இல. 135

Saturday 11,June, 2022

12 பக்கங்கள்

## மடு மாதா ஆடிமாத திருவிழா ஜூலை 02

### முன் ஆயத்த கலந்துரையாடல் நேற்று



**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழாவுக்கான முன் ஆயத்த கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை (10) 06

## சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர் பாலகிருஷ்ணனுடன் GL சந்திப்பு

### இலங்கைக்கு உதவியளிக்குமாறும் கோரிக்கை



சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஷ்ணனின் அழைப்பின் பேரில், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கடந்த 8 – 9ஆம் திகதிகளில் சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் விளக்கமளித்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ், இலங்கைக்கான நிதியுதவியைப் பெறுவதற்கும், 06

## 13 ஆம் திகதி திங்களன்று விசேட அரச விடுமுறை

அரசாங்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமையை விசேட அரச விடுமுறை தினமாக அறிவித்துள்ளது. பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் இந்த அறிவிப்பை நேற்று வெளியிட்டுள்ளார்.

இதன்படி, அரச சேவையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இந்த விடுமுறை வழங்கப்படவுள்ளதுடன் அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகளுக்கு இந்த விடுமுறை செல்லுப்படியாகாதென்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, போக்குவரத்து பிரச்சினைகள், மின்சார துண்டிப்பு உள்ளிட்ட விடயங்களை கருத்தில் கொண்டு 06

# நாட்டின் இக்கட்டான சூழ்நிலையில் ஊடகங்களின் பங்களிப்பு முக்கியம்

### ஊடக நிறுவன தலைவர்களிடம் பிரதமர் ரணில் தெரிவிப்பு



நாட்டின் இக்கட்டான சூழ்நிலையில் ஊடகங்களின் பங்களிப்பு முக்கியமானதென ஊடக நிறுவன தலைவர்களிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வரவிருக்கும் மாதங்களில் நாட்டுக்கு உதவ, ஊடக நிறுவனங்களின் ஆதரவில் தான் தங்கியிருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க (09) மாலை இலங்கையிலுள்ள ஊடக நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்தார். இதன்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் நிலைமையின் உண்மையான நிலையை முன்வைக்க அரசாங்கத்துக்கு 06

# கடந்த 08 நாட்களில் 2,416 டெங்கு நோயாளர்கள் பதிவு

### 18 MOH பிரிவுகள் அபாய வலயமாக அறிவிப்பு

### 15 முதல் 21 ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம்



நாட்டின் 16 மாவட்டங்களில் 83 சுகாதார உத்தியோகத்தர் பிரிவுகள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சுதத் சமரவீர நேற்று (10) தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டம் அதிகளவிலான டெங்கு பரவும் மாவட்டமாகவும், 18 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. பாதுக்க, பொரலஸ்கமுவ, ஹன்வெல்ல, கஹதுடுவ, பத்தரமுல்லை, இரத்மலானை, எகொடஉயன மற்றும் கொதடுவ ஆகிய இடங்கள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாக கருதப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, யாழ்ப்பாணம், இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்கள் டெங்கு அபாயமுள்ள மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

நாடு முழுவதிலும் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களில் 51.2 வீதமானவர்கள் மேல் மாகாணத்தில் மாத்திரம் பதிவாகியுள்ளதாகவும், கடந்த 08 நாட்களில் மாத்திரம் 2,416 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நேற்று முன்தினம் (09) 349 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். 06

### 24 மணி நேரம் காய்ச்சல் இருப்பின் உடன் மருத்துவரை நாடுமாறும் அறிவிப்பு

மகளிர் விவகாரம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு;

## இரு புதிய அமைச்சு பதவிகளை நிறுவ விசேட வர்த்தமானி

### திணைக்களங்கள்,கூட்டுத்தாபனங்கள் குறித்தும் விளக்கம்



இரண்டு புதிய அமைச்சு பதவிகளை நிறுவுவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி மகளிர் மற்றும் சிறுவர் விவகார, சமூக வலுப்படுத்துகை அமைச்சு, தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சு பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் இந்த அமைச்சுகளின் கீழ் உள்ளடங்கும் திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் 06

கடனுதவி தொடர்பாக உடன்பாடுகளை எட்ட

## IMF இன் பிரதிநிதிகள் குழு 20 ஆம் திகதி இலங்கை வருகிறது




சர்வதேச நாணய நிதியத்தினூடாக வழங்கப்படவுள்ள கடனுதவி தொடர்பாக பணியாளர் மட்ட உடன்பாடுகளை எட்டுவதற்காக நிதியத்தின் (IMF) பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் 20ஆம் திகதி இலங்கை வரவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) முகாமைத்துவப் பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜியாவை, பிரதமர் கடந்த 07ஆம் திகதி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பணியாளர் மட்டக் குழுவொன்றை விரைவில் இலங்கைக்கு அனுப்புமாறு கோரிக்கை விடுத்திருந்தார். 06

## மே 09 வன்முறைகளை நியாயப்படுத்தி சபையில் உரையாற்றிய சாணக்கியன் M.P

### மன்னிப்பு கேட்காவிடின் விசாரணை நடத்த பிரதமர் ரணில் வலியுறுத்து





**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**

நாட்டில் அண்மையில் நடைபெற்றுள்ள வன்முறைச் சம்பவங்கள், படுகொலைகள், தாக்குதல்களை நியாயப்படுத்தி சபையில் உரையாற்றியுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி ராஜமாணிக்கம் சாணக்கியன் மீது உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவரது உரை தொடர்பில் சபையில் நேற்று தமது கண்டனத்தை வெளியிட்ட பிரதமர், 06

## 22 சதவீத மக்களுக்கு உணவு உதவி தேவை

### இலங்கை நிலை குறித்து ஐ.நா தகவல்



நாட்டின் 22 வீதமான மக்களுக்கு உணவு உதவி தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட இணைப்பாளர் ஹென்ன சிங்கர் ஹெம்டே இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

50 வீதமான அளவு விளைச்சல் குறைவால் இலங்கையில் சுமார் 4.9 மில்லியன் மக்களுக்கு உணவு உதவி தேவைப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். வழமையான நெல் விளைச்சலில் 50 வீதமான அளவு விளைச்சல் 06

பொது போக்குவரத்தை ஒழுங்குபடுத்த திட்டம்

### Park & Drive முறைமைக்கு முன்னுரிமை

## அலுவலக சேவைகளை இலக்காக கொண்டு புதிய ரயில் சேவைகள்



பயணிகளைக் கவரும் வகையில் பொதுப் போக்குவரத்து சேவைகளை வினைத்திறன் மற்றும் தரம் வாய்ந்ததாக பேண வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி 06

## குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில் தினமும் குவியும் மக்கள்

### கட்டுப்படுத்த முடியாது அதிகாரிகள் அவதி



இலங்கையில் கடவுச்சீட்டுகளின் தேவை பாரியளவு அதிகரித்து, பிராந்திய அலுவலகங்களில் நிலைமை கட்டுப்படுத்த முடியாத அளவிற்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நாள் சேவையின் கீழ் நாளாந்தம் வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் சராசரி எண்ணிக்கை 2500 ஆகும். 06

## பசிலின் வெற்றிடத்திற்கு தம்மிக்கவின் பெயர் பரிந்துரை

### தேர்தல் ஆணைக்குழுவிடம் சாகர கையளிப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ பதவி விலகியதையடுத்து அந்த வெற்றிடத்துக்கு இலங்கையின் முன்னணி வர்த்தகர் தம்மிக்க பெரேராவின் பெயரை சட்டத்தரணி சாகர காரியவசம் நேற்று (10) தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளார்.

அதே போன்று தம்மிக்க பெரேராவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி உறுப்புரிமையையும் நேற்று (10) பெற்றுக் கொண்டார்.

மேலும் அவர் தனது அனைத்து வர்த்தக நிறுவனங்களின் பணிப்பாளர் சபையிலிருந்தும் விலக முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தம்மிக்க பெரேரா ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி உறுப்புரிமையை பெற்று தனது அனைத்து வர்த்தக நிறுவனங்களின் 06

உரிமை கோரப்படாத நிலையிலிருந்த

## 24,000Kg அப்பிள் பழங்கள் மிருகக்காட்சி சாலைக்கு

### அமைச்சர் நிமல் அதிகாரிகளிடம் கையளிப்பு



**நுவரெலியா தினகரன் நிருபர்**

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 24,000 கிலோ ஆப்பிள் உரிமையாளர்கள் பெற்றுக் கொள்ளாததால் அவை தெஹிவளை மிருகக் காட்சி சாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. 06

கப்பலுக்கான கட்டணம் செலுத்துவதில் தாமதம்;

## இன்றும் GAS விநியோகம் இடம்பெற வாய்ப்பில்லை

### லிற்றோ நிறுவனம் அறிவித்தல் விடுப்பு



சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் இன்றும் முன்னெடுக்கப்பட்ட மாட்டாதென லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது.

3,900 மெற்றிக் தொன் சமையல் எரிவாயுடன் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்த கப்பலுக்கு செலுத்தவேண்டிய 06

எவருக்கும் எமது நிலை வரக்கூடாது;

## நாங்கள் மிக மோசமாக நடத்தப்பட்டோம்

### பயோலா சென்றடைந்த பிரியா தகவல்

தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது நாங்கள் மிக மோசமாக நடத்தப்பட்டதாக குயின்லாந்தின் பயோலா சென்றடைந்த பின்னர் பிரியா நடேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

நாங்கள் மோசமாக நடத்தப்பட்டோம், எனது பிள்ளைகள் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டனர், எனது இளையமகள் தனது பல்லை இழந்தாரென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் மிகவும் அவலம் நிறைந்த வாழ்வை வாழ்ந்தோம் எவருக்கும் இந்த நிலையேற்படக்கூடாதென குறிப்பிட்டுள்ள அவர், ஆட்சி மாற்றம் நாங்கள் இங்கு வரும் 06

பொருளாதார நெருக்கடியால் கடும்பாதிப்பு;

## இலங்கையில் குழந்தைகளுக்காக 25 மில். டொலர்கள் தேவை

### யுனிசெப் நிறுவனம் கோரிக்கை விடுப்பு




இலங்கையில் காணப்படும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள 1.7 மில்லியன் குழந்தைகளின் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை யுனிசெப் கோருகிறது

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, நாட்டிலுள்ள மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையில் சுமார் 06

## புதிய அமைச்சர்களாக பவித்ரா - தம்மிக்க?

### நியமனம் பெறலாம் என தகவல் கசிவு





இரண்டு புதிய அமைச்சு பதவிகளும், அவற்றுக்கான விடயப்பரப்புகளும் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது. 06

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனின் முக்கிய நகரில் தொடர்ந்தும் உக்கிர மோதல்



உக்ரைனின் கிழக்குப் பகுதியில் உள்ள செவெரோடோனெட்ஸ்க் நகரில் தொடர்ந்து உக்கிர மோதல் நீடித்து வருகிறது.

நகரைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ரஷ்யாவும் உக்ரைனும் போராடுகின்றன.

மொத்த டொன்பாஸ் வட்டாரத்தின் நிலையும் அந்த ஒரு நகரைச் சார்ந்திருப்பதாக உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி கூறினார்.

நாட்டின் கருங்கடல் துறைமுகங்களை ரஷ்யா மூடியிருப்பதால் மில்லியன் கணக்கானோர் பசியால் வாடக்கூடும் என்றார் அவர்.

பாதுகாப்பான வழியில் தானியங்களை ஏற்றுமதி செய்ய, ஐக்கிய நாடுகள் சபையுடன் சேர்ந்து செயல்படுவதாகவும் செலென்ஸ்கி குறிப்பிட்டார்.

உணவு இருப்புகளை ரஷ்யா ஆயுதங்களாய்ப் பயன்படுத்துவதாக உக்ரைனும் மேற்கத்திய நாடுகளும் குற்றஞ்சாட்டியுள்ளன.

ஆனால் உணவுப் பற்றாக்குறைக்கு சர்வதேச தடையுத்தரவுகளும் உக்ரைன் கடலில் வைத்திருக்கும் கண்ணிவெடிகளும் காரணம் என்று மொஸ்கோ கூறுகிறது.


தலைநகர் கியேவை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் தோல்வி அடைந்துள்ள ரஷ்யா, டொன்பாஸை முழுமையாக உக்ரைனிடமிருந்து விடுவிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டில் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் உக்ரைனிலிருந்து டொன்பாஸை பிரித்திருந்தனர். இவ்வாண்டு பெப்ரவரி 24ஆம் திகதி ஊடுருவலுக்கு முன்னரே டொன்பாஸில் மூன்றில் ஒரு பகுதி பிரிவினைவாதிகளின் வசமிருந்தது.

ரஷ்யா, உக்ரைனின் லுஹான்ஸ்க் வட்டாரத்திலும் குண்டு மழை பெய்து பேரழிவை ஏற்படுத்தி உள்ளதால் அது சின்னா பின்னமாகக் காட்சி அளிக்கிறது. ரஷ்யா, லுஹான்ஸ்கியில் 98 வீதமான பகுதிகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டது.

இன்னமும் இந்த வட்டாரத்தில் உள்ள உக்ரைனிய வீரர்களை ரஷ்யா சுற்றி வளைத்து வருகிறது. குடியிருப்பு வட்டாரங்களையும் ரஷ்யா தாக்கி வருவதாகக் கூறப்படுகிறது.

## சர்வதேச சட்டத்தை மீறல்: குவாட் நாடுகள் எதிர்ப்பு



கடல் சட்டம் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயங்களையும் சர்வதேச சட்டங்களையும் தாம் மதித்து கடைபிடித்து வருவதாகவும் அந்த நிலையை மாற்ற முயலும் அனைத்து அழுத்தங்களையும், ஆத்திரமூட்டும் அல்லது ஒருதலைப் பட்சமான நடவடிக்கைகளையும் தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் குவாட் நாடுகள் தெரிவித்துள்ளன.

சர்ச்சைக்குரிய விடயங்களை இராணுவமயமாக்கலுக்கு உட்படுத்துவதன் மூலம் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரிக்கவே வழிவகுக்கும் என்றும் அந்நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கும் குவாட் அமைப்பு தலைவர்களது மாநாட்டுக்கு பின்னர் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாராளுமன்றக் கலவரம்: டிரம்ப் மீது குற்றச்சாட்டு

அமெரிக்க பாராளுமன்றக் கட்டடத்தில் கடந்த ஆண்டு நடந்த கலவரத்துக்கு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் காரணம் என்று சம்பவத்தை விசாரிக்கும் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்க பாராளுமன்ற வளாகத்தில் 2021 ஜனவரி 6 ஆம் திகதி நடந்த வன்முறைகள் தொடர்பாக விசாரிக்கும் பாராளுமன்ற விசாரணைக்குழு முன்னிலையில் டிரம்ப் மீது இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான கண்டுபிடிப்புகள் கடந்த வியாழக்கிழமை காலை வெளியிடப்பட்டன.

விசாரணைக் குழுத் தலைவரும் துணைத் தலைவரும், டிரம்ப் கலவரத்தைத் தூண்டியதாகக் கூறினர்.

ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தும் முயற்சியின் விளைவாகக் கலவரம் மூண்டதாய்க் குழுத் தலைவர் பென்னி தோம்ப்சன் கூறினார்.




ஜனவரி மாதம் 6ஆம் திகதி வெடித்த கலவரம், ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்றதை நிராகரிக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட, திட்டமிடப்பட்ட முயற்சி என்று குழு கண்டுபிடித்தது.

டிரம்ப் வெற்றி பெறுவதை உறுதிசெய்ய வெள்ளை மாளிகை சட்டவிரோதத் திட்டங்களை வகுக்க முயற்சி செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்படவுள்ளது.

விசாரணைகளின் போது ட்ரம்பின் நெருங்கிய தரப்புகள் அளித்த வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்ட வீடியோக்களையும் பாராளுமன்றத் தெரிவுக்குழு வெளியிட ஆரம்பித்துள்ளது.

அதில் தேர்தலில் மோசடி இடம்பெற்றுள்ளதாக டொனால்ட் டிரம்ப் கூறுவது தவறு என தான் பல தடவைகள் அவரிடம் தெரிவித்ததாக முன்னாள் சட்ட மா அதிபர் பில் பார் அளித்த வாக்குமூலமும் ஒளிபரப்பப்பட்டது.

அத்துடன் தனது தந்தை கருத்தை பில் பார் மறுத்ததை தான் ஏற்றுக்கொண்டதாக டிரம்பின் மகள் இவன்கா ட்ரம்ப் அளித்த வாக்குமூலமும் ஒளிபரப்பப்பட்டது.

## உக்ரைனுக்காக போர் புரிந்த 3 வெளிநாட்டினருக்கு தூக்கு



உக்ரேனுக்காகப் போரில் சண்டையிட்டுப் பிடிபட்ட வெளிநாட்டவர் மூவருக்கு கிழக்கு உக்ரைனில் உள்ள ரஷ்யா சார்பான நீதிமன்றம் ஒன்றில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த இருவரும் மொரோக்கோவைச் சேர்ந்த ஒருவரும் கூலிப்படையினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. உக்ரைனியத் தலைநகர் கீயேவைத் தற்காத்துச் சண்டையிட்டபோது ரஷ்யாவுக்கு ஆதரவான கிளர்ச்சியாளர்கள் அவர்களைப் பிடித்தனர்.

அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதைச் சாடிய பிரிட்டன் ரஷ்ய நீதிமன்றத்தின் தீர்ப்பு நியாயமற்றது என்று கூறியது.

சர்வதேச சட்டம் மீறப்பட்டதாகவும் பிடிபட்ட நபர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அது கேட்டுக்கொண்டது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் பூசல் ஆரம்பித்ததில் இருந்து வெளிநாட்டுப் போராளிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருப்பது இதுவே முதன் முறை.

இந்த தண்டனைக்கு எதிராக மூவரும் மேன்முறையீடு செய்யப்போவதாக அவர்களின் வழக்கறிஞர் ரஷ்யாவின் டாஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

## ரஷ்யாவுடனான எல்லையில் சுவர் கட்டுகிறது பின்லாந்து



பின்லாந்து ரஷ்யாவுடனான தனது கிழக்கு எல்லையில் தடுப்பை கட்டுவதற்கு அனுமதிக்கும் வகையில் எல்லை சட்டத்தில் திருத்தம் கொண்டுவர திட்டமிட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புக்கு மத்தியில் அச்சுறுத்தலுக்கு எதிரான தயார்நிலையை வலுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அது குறிப்பிட்டுள்ளது.

வரலாற்று ரீதியாக ரஷ்யாவுடன் போர்களை சந்தித்திருக்கும் பின்லாந்து தற்போது நேட்டோ கூட்டணியில் இணைவதற்கும் விண்ணப்பித்துள்ளது. அந்த நாடு காட்டினால் சூழப்பட்ட 1300 கிலோமீற்றர் நீளமான எல்லையை ரஷ்யாவுடன் பகிர்ந்து கொள்கிறது. இந்த எல்லைகள் அடையாளங்கள் மற்றும் பிளாஸ்டிக் கோடுகளாலேயே அடையாளம் இடப்பட்டுள்ளது.

ரஷ்யா எல்லைகள் வழி தஞ்சக்கோரிக்கையாளர்களை அனுப்புவதன் மூலம் அழுத்தம் கொடுக்க முயற்சிக்கும் என்று பின்லாந்து அஞ்சுகிறது.

இந்நிலையில் தஞ்சக் கோரிக்கையாளர்களை ஏற்பதை ஒரு நுழைவுப் புள்ளியில் மாத்திரம் மேற்கொள்ள முடியுமான முன்மொழி உட்பட சட்டத்தில் அரசு திருத்தங்களைக் கொண்டுவர உள்ளதாகக் கூறப்படுகிறது.



## விண்கல் மாதிரியில் உயிர் தோன்றியதற்கான ஆதாரம்

ஜப்பானிய விண்கலம் ஒன்று சேகரித்த விண்கல் தூசியில் பூமியில் உள்ள உயிர் கட்டமைப்பின் சில கரிமப் பொருளை கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது விண்வெளியில் இருந்தே பூமியில் உயிர் தோன்றி இருக்கலாம் என்பதை காட்டுவதாக விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

300 மில்லியன் கிலோமீற்றருக்கு அப்பால் இருக்கும் ரியுகு என்ற விண்கல்லுக்கான ஆறு ஆண்டுப் பயணத்துக்குப் பின்னரே 2020 ஆம் ஆண்டில் அந்த விண்கல்லில் இருந்து பண்டைய பொருள் பூமிக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆனால் தற்போதே அந்த விண்பொருளின் இரகசியத்தை கண்டறிய ஆரம்பித்துள்ளனர்.

இருண்ட சிறிய பாறை ஒன்றில் 5.4 கிராம் அளவான தூசியை அவர்கள் முதல்முறை ஆராய ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் மேற்கு ஜப்பானில் இருக்கும் ஒகாயா பல்கலைக்கழகத்தின் தலைமையிலான ஆய்வுக் குழு ஒன்றில் ஆய்வு பற்றிய விபரம் நேற்று வெளியிடப்பட்டது.

அதில் 'அமினோ அமிலங்கள் மற்றும் பிற கரிமப் பொருட்கள் பூமியில் உயிர்கள் தோன்றியதற்கான துப்புகளை அளிக்கின்றன' என்று குறிப்பிட்டுள்ளது.

## இந்திய பொருளாதார வளர்ச்சியில் வீழ்ச்சி




2023 நிதியாண்டுக்கான இந்திய பொருளாதார வளர்ச்சி 6.9 வீதமான இருக்கும் என்று பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு கணித்துள்ளது. இது பிரதான வங்கி அல்லது நிறுவனம் ஒன்றினால் முன்வைக்கப்பட்ட மிகக் குறைவான வளர்ச்சியாக உள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பால் நாடு மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதாக அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

"வலுசக்தி, உரங்கள் மற்றும் சமையல் எண்ணெய் இறக்குமதியாளராக இந்தியா உக்ரைன் போரினால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

பலவீனமான வெளிப்புறத் தேவை வளர்ச்சி மற்றும் இறுக்கமான பண நிலைமைகள் வலுவான அரசாங்க செலவினங்கள் மற்றும் வணிக சூழலை எளிதாக்குவதற்கான எதிர்பார்ப்பை குறைக்கப்பதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2022 நிதியாண்டில் 8.7 வீதத்தை எட்டிய நிலையில் 2023 இல் 6.9 ஆகவும் 2024இல் 6.2 ஆகவும் மந்தமடையும் என கணிக்கப்பட்டுள்ளது" என்று அந்த நிறுவனத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## நைஜீரிய கிராமத்தில் 32 பேர் சுட்டுக்கொலை



நைஜீரியாவில் உள்ள கடுனா மாகாணத்தில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 32 பேர் பலியாகினர்.

அண்மைக் காலமாக நைஜீரியாவில் தொடர்ந்து தீவிரவாத தாக்குதல்களும் ஆள் கடத்தலும் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் கடுனா மாகாணத்தைச் சேர்ந்த கஜுரா கிராமத்தில் நுழைந்த அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 32 பேர் உயிரிழந்தனர். தாக்குதல் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக அம்மாகாண அரசு தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த ஞாயிற்றுக்கிழமை கத்தோலிக்க தேவாலயத்தில் மர்ம நபர்கள் புகுந்து கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 50 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜேம்ஸ்வெப் மீது விண்கல் மோதியதில் சிறிய சேதம்



விண்வெளியில் மிதக்கும் அதிநவீன தொலைநோக்கியான ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியின் முக்கிய கண்ணாடி மீது ஒரு சின்னஞ்சிறு விண்கல் மோதியது.

தூசி அளவுக்கான நுண் விண்கல் ஏற்படுத்திய சேதம், தொலைநோக்கி திரட்டும் தரவுகளில் கவனிக்கத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், தொலைநோக்கி திட்டத்தின் ஒட்டுமொத்த செயல்பாட்டை இது மட்டுப்படுத்தாது என்று கருதப்படுகிறது.

விண்வெளியை நோக்கும் விடயத்தில் புரட்சிகரமான முன்னேற்றத்தைக் கொண்டுவந்த ஹபிள் விண்வெளி தொலைநோக்கியின் ஆயுள் குறைவாகவே உள்ள நிலையில் அதனை பதிலீடு செய்வதற்காக உருவாக்கப்பட்ட இந்த தொலைநோக்கி கடந்த டிசம்பர் மாதம் விண்ணில் ஏவப்பட்டது.

பேரண்டத்தை இந்த தொலைநோக்கி எப்படி நோக்கியது என்பது பற்றிய படங்களை வானியலாளர்கள் ஜூலை 12ஆம் திகதி வெளியிட உள்ளார்கள்.

**தொழுகை நேரம்**

11 முதல் 14 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.31 |
| லுஹர் | 12.11 |
| அஸர் | 03.39 |
| மஃரிப் | 06.26 |
| இஷா | 07.43 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: அமிர்தசித்த யோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

## சுற்றுலாப் பயணிகளை கவர புதிய அணுகுமுறைகளை கண்டறியவும்

### ஜனாதிபதி தெரிவிப்பு



சுற்றுலா பயணிகளின் வருகையை மேம்படுத்த புதிய அணுகுமுறைகளைக் கண்டறிய வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

நேற்று (10) முற்பகல் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சுற்றுலாத்துறை அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

04 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் 06



யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த யாழ் கதிர்காமம் பாதயாத்திரை நேற்று முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் பிரவேசித்தது. கடந்த 04 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்த இப் பாதயாத்திரை 08 ஆவது நாள் இன்று (11) சனிக்கிழமை, முள்ளிவாய்க்கால் சித்திவிநாயகர் ஆலயத்தை அடைந்து, இன்றிரவு வட்டவாகல் சப்தகன்னிநகர் ஆலயத்தில் தங்கும். படம் காரைதீவு குறூப் நிருபர்

# டிசம்பர் வரை தேவையான அரிசி கையிருப்பில்

### அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

இந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குப் போதுமான அரிசி தொகை நாட்டில் இருப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பற்றாக்குறையாக உள்ள அரிசி தொகை வர்த்தக அமைச்சினால் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் வருடாந்த அரிசி நுகர்வு 24 இலட்சம் மெற்றிக் தொன்னாக உள்ளதுடன், வருடாந்த அரிசி உற்பத்தி 16 இலட்சம் மெற்றிக் தொன்னாக காணப்படுகிறது.

இந்த அறுவடை 08 மாத காலப் பகுதிக்குப் போதுமானதாகும். எனவே, நான்கு மாத காலப்பகுதிக்கு அரிசி பற்றாக்குறையாகும் நிலைமை உள்ளது. இம்முறை சிறுபோகத்தில் திட்டமிடப்பட்ட பயிர் நிலத்திற்கு அதிகமான நிலப்பரப்பில் பயிரிடுவதற்கு விவசாயிகள் முன்வந்துள்ளனர். 2020ஆம் ஆண்டு சிறுபோகத்தில் 4 ,43,362



ஹெக்டேயர் நிலப்ப ரப்பில் பயிரிடப்பட்டது. 2021ஆம் ஆண்டு இந்த நிலப்பரப்பின் அளவானது 4,45, 0 00 ஹெக்டேயராக காணப்பட்டதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் இந்த ஆண்டு இப் பயிர் நிலத்தின் அளவு 4,47,000 ஹெக்டேயராக அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆண்டு முன்னதாக 2,44, 000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிர் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டிருந்தது.

எனினும், தாங்கள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக தற்போது 4,47,000 ஹெக்டேயரில் பயிரிடும் பணிகள் இடம்பெறுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மக்கள் தற்போது, அரிசியைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தப் பார்க்கின்றனர்.

தற்போதைய நிலைமையில் இந்த ஆண்டின் இறுதி சில நாட்களின் போதே அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும். அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்துக்கே அரிசி தேவையாக உள்ளது.

### பதுக்கிய அரிசி மூடைகள் மீட்பு;

## காத்தான்குடியில் களஞ்சியசாலை சுற்றிவளைப்பு



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு காத்தான்குடி அமானுல்லாஹ் வீதியில் அரிசி மூட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல சரக்கு விற்பனை நிலையமொன்றின் களஞ்சியசாலையை நேற்று (10) வெள்ளிக்கிழமை காலை சுற்றிவளைத்த நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை அரிசி மூட்டைகளை மீட்டதுடன் அரசின் கட்டுப்பாட்டு விலைக்கு பொது மக்களுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் மட்டக்களப்பு அதிகாரிகளுக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் வழிகாட்டலிலும் ஆலோசனையின் பேரிலும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் 06

## MP ஒருவரை கொலை செய்யும் செயற்பாட்டை அனுமதிக்க முடியாது

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**



மக்கள் பிரதிநிதி ஒருவரை கொலை செய்த பயங்கரவாத செயற்பாட்டை அனுமதிக்க முடியாது. இந்த கலாசாரம் மாற்றப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அமரகீர்த்தி அத்துகோரளவின் அனுதாபப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது, அமரகீர்த்தி அத்துகோரளவின் கொலையை வன்மையாக கண்டிக்கிறோம். அன்றைய தினம் எமது 06

## சுற்றாடல் அமைச்சர் ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் சந்திப்பு



சுற்றாடல்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹ்மட்டுக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் காலித் நாசர் சுலைமான் அல் அமரிக்குமிடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இச் சந்திப்பு சுற்றாடல் துறை அமைச்சில் நேற்று முன்திம் (09) நடைபெற்றது.

சுற்றாடல் துறையின் மேம்பாடுகளால், அடையக்கூடிய உச்சபட்ச நன்மைகளை அடையாளம் காணல் மற்றும் அவற்றை அமுல்படுத்துவதில் இரு நாடுகளும் ஒத்துழைத்துச் செயற்படல், இலங்கை 06

## ரஞ்சனுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பினை வழங்க வேண்டும்

### – சரத் பொன்சேகா

சிறையிலுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கேட்டு கொண்டுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவை சிறைச்சாலையில் சென்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு கடுமையான தண்டனை கிடைத்துள்ளதாக தாங்கள் உறுதியாக நம்புவதாக அவர் தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இழைக்கப்பட்ட அநீதியை அரசாங்கம் பரிசீலிக்குமென்றும், அவர் மேலும் ஒன்பது மாதங்கள் சிறைவாசம் அனுபவிக்க உள்ளதால் அவருக்கு மன்னிப்பு வழங்கப்படுமென நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்க தனது இலட்சியங்கள் மற்றும் இலக்குகளைக் கைவிடவில்லையெனவும் தற்போது தனது கல்வி இலக்கை கடுமையாகப் பின்பற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறையிலிருந்து வெளிவந்தவுடன் ரஞ்சன் ராமநாயக்க தண்டனைக்கு முன்னர் எம்.பி.யாக இருந்ததைப் போன்று தொடர்ந்தும் மக்களுக்கு சேவையாற்றுவாரென உறுதியாக நம்புவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையருக்கு வேலைவாய்ப்பு வழங்குவது குறித்து சிங்கப்பூர் அவதானம்

இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடியை கருத்தில் கொண்டு இலங்கை பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க சிங்கப்பூர் அரசாங்கம் இணங்கியுள்ளது.

தற்போது சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர், நிதி அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சிங்கப்பூருக்கான ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும், இலங்கை 06

# மே 09ஆம் திகதி வன்முறையின் பின்னணியில் மதத்தலைவர்கள்

### சபையில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அம்பலம்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நாட்டில் கடந்த 09ஆம் திகதி நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் மதத் தலைவர்களும் உள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை பாதாள உலக கும்பல்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களையும் பாதுகாப்பதற்கு சட்டம் முன் நின்றது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமரகீர்த்தி அத்துகோரளவின் அனுதாபப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்:

அமரகீர்த்தி அத்துகோரளவின் மரணம் ஒரு கொடூரமான படுகொலையாகும். அவர் கௌரவமாக வாழ்ந்த ஒரு மனிதர். பாராளுமன்ற உறுப்பினர்.

அவரது படுகொலையை தொலைக்காட்சியில் பார்த்தபோது அவரைக் கொன்றவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. வீடுகளுக்கு தீ வைத்தவர்கள் நீதிமன்றத்தில் சுமார் 150 சட்டத்தரணிகள் மூலமாக எந்த குற்றமும் செய்யாதவர்கள் போன்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது போன்ற அப்பாவி மனிதர்களை கொல்வது எவ்வாறு நியாயமாகும். நாம் வெறுமனே அனுதாபப் பிரேரணை நடத்துவதில் பயனில்லை. இதன் மூலம் நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். இது நம் அனைவருக்கும் சிறந்த பாடம்.

சம்பவம் இடம்பெற்ற கடந்த மே 9ஆம் திகதி மக்களை குழப்புவதிலும் வீடுகளுக்கு தீ வைத்ததிலும் பௌத்த துறவிகளும் சம்பந்தப்பட்டுள்ளனர். வன்முறை சம்பவங்களுக்கு தலைமைத்துவம் வழங்கியது அந்தப் பகுதிகளில் உள்ள பௌத்த துறவிகளே.

என்னுடைய வீட்டைத் தாக்குவதற்கு வந்தவர்களுள் ஒரு பௌத்த மத துறவியும் உள்ளடங்குகிறார்.

### அமரகீர்த்தி அத்துகோரளவின்

## குடும்பத்திற்கு நஷ்ட ஈடுவழங்க வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்**

கொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்த் தரப்பு பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி தெரிவித்தார்.

அமரகீர்த்தி அத்துகோரளவின் அனுதாபப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் அமரகீர்த்தி அத்துகோரள எம்.பி குரூரமான முறையில் கொல்லப்பட்டதை ஊடகங்களில் வாயிலாக கண்டேன். பௌத்த நாட்டில் இவ்வாறான கொலை நடந்தது. அவர் 2 தடவை மாகாண சபைக்கு தெரிவானார். பிரதேச நலனுக்காக பங்காற்றினார். அவரின் அரசியல் பயணம் எதிர்பாராத கால கட்டத்தில் நிறைவடைந்தது. ஆளும் தரப்பு எதிர்த்தரப்பு என விமர்சித்துக் கொண்டாலும் எமக்கு எவருடனும் தனிப்பட்ட குரோதம் கிடையாது.

அவரின் கொலை தொடர்பில் துரித விசாரணை நடத்தி தவறு செய்தவர்களை தண்டிக்க வேண்டும். பிரித்தானிய எம்.பி ஒருவர் அண்மையில் கொல்லப்பட்டார். பெண் எம்.பி ஒருவரும் இவ்வாறு கொலையானார். டிரையல் எட்பார் விசாரணை நடத்த வேண்டும். பாராளுமன்றம் அவரின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## அரபா மகா வித்தியாலயத்தில் புதிய கட்டட திறப்பு விழா

கம்பஹா மாவட்டம், உடுகொட அரபா மகா வித்தியாலயத்தில் குவைட் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தின் திறப்பு விழா இன்று (11) சனிக்கிழமை இடம்பெறும்.

இன்று காலை 9.30 மணிக்கு இடம் பெறும் இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கட்டார் தூதரகத்தின் சார்பில் அதன் விசேட பிரதிநிதி அஷ்ஷெயிக் எம்.எம்.எம். பிர்தவுஸ் (நளீமி) கலந்து கொள்கிறார். சிறப்பு அதிதியாக அல்ஹிமா இஸ்லாமிய சேவைகளின் செயலாளர் அஷ்ஷெயிக் எம்.ஏ.ஏ.நுருல்லா (நளீமி) பங்கேற்கிறார்.

மேலும் கம்பஹா மாவட்ட கல்விப் பணிப்பாளர் எம்.ஏ. அநுர பிரேமலால், நிர்வாகப் பணிப்பாளர் 06

**நாணய மாற்று**


| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 255.52 | 266.96 |
| கனடியன் டொலர் | 280.59 | 291.86 |
| யூரோ | 383.09 | 393.95 |
| ஜப்பான் யென் | 2.7258 | 2.8339 |
| சிங்கப்பூர் டொலர் | 258.78 | 267.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 445.19 | 460.70 |
| சுவிஸ் பிராங்க் | 369.45 | 383.41 |
| அமெரிக்க டொலர் | 355.31 | 365.28 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 955.66 | கட்டார் ரியால் | 98.64 |
| குவைத் டினார் | 1,177.52 | சவூதி ரியால் | 96.05 |
| ஓமான் ரியால் | 935.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.09 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 28ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 10




# உணவு உற்பத்தியில் கவனம் செலுத்துவது நாட்டு மக்கள் ஒவ்வொருவரினதும் கடமை

உணவு உற்பத்தியின் அவசியம் தொடர்பாக உலகமே இன்று குரல் கொடுத்து வருகின்றது. உணவுப் பொருட்களின் பற்றாக்குறையும், விலையேற்றமும் இக்காலத்தில் இலங்கையில் மாத்திரமன்றி உலக நாடுகள் அனைத்திலுமே பிரதான பிரச்சினையாக உள்ளன.

உலக நாடுகள் அனைத்தையும் இரு வருட காலமாக கொவிட் தொற்று முற்றாக முடக்க வைத்து இருந்ததனாலும், எதிர்கால பொருளாதாரம் குறித்து நாடுகள் சரியாகத் திட்டமிடாததாலுமே இவ்வாறான விளைவு ஏற்பட்டுள்ளது. உணவுப் பொருட்களின் விலைகள் நாளும் பொழுதும் தாறுமாறாக அதிகரித்தபடி செல்கின்றன. விலையுயர்வைத் தாங்க முடியாதவர்களாக மக்கள் பெரும் சிரமம் அனுபவித்து வருகின்றனர்.

உலக நாடுகளை எடுத்துக் கொண்டோமானால் மக்கள் பெருக்கமானது கட்டுக்கடங்காமல் பெருகி விட்டது. அதற்கேற்ப உணவுப் பொருட்களின் நுகர்வும் அதிகரித்துச் செல்கின்றது. ஆனால் மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு ஏற்றவாறு உலகில் உணவு உற்பத்தியானது அதிகரிக்கவில்லை என்பதுதான் இங்கே ஆபத்துக்குரிய விடயமாக உள்ளது. மக்களின் அதிகரித்த நுகர்வுக்கேற்ப உணவு உற்பத்தி அதிகரிக்கவில்லையாயின் உணவுப் பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு அவற்றின் விலைகள் அதிகரித்துச் செல்வது தவிர்க்க முடியாததாகும்.

உலக நாடுகளில் தற்போது நிலவுகின்ற பிரதானமான பிரச்சினை இதுவேயாகும். மக்கள் தொகைப் பெருக்கத்துக்கேற்ப உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிப்பது குறித்தும், மக்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தை எதிர்கால நெருக்கடி கருதி திட்டமிடுவது குறித்தும் உலகம் பெரிதாகக் கவனம் செலுத்தவில்லை. இவை சம்பந்தமாக மக்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குவது குறித்தும் உலக நாடுகள் பொருட்படுத்தவில்லை. இந்த அலட்சியமானது எதிர்காலத்தில் பாரிய சிக்கலாக உருவெடுக்கப் போகின்றது என்பதுதான் அறிவியலாளர்களின் கருத்தாகும்.

இவ்விடயங்களில் கடைப்பிடிக்கப்படுகின்ற அலட்சியம் காரணமாக தனியொரு நாட்டுக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த உலகத்துக்குமே நெருக்கடி ஏற்படக் கூடிய ஆபத்து உள்ளதாக நிபுணர்கள் ஏற்கனவே எச்சரிக்கத் தொடங்கி விட்டனரென்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வேளையில் உணவு உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்து செயற்பட வேண்டியது ஒவ்வொரு நாட்டினதும் தலையாய பொறுப்பாகும். மனித வாழ்க்கையின் இருப்புக்கு உணவுதான் அதிமுக்கியமாகும். எனவே உணவுப் பொருட்களில் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் நாடெங்கும் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அவசரத் தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

இன்று எமது நாட்டுக்கு அரசியலுக்கு அப்பால் துரிதமான பொருளாதார அபிவிருத்தியே மிக அவசியமாக இருக்கின்றது. இன்றைய வீழ்ச்சியில் இருந்து எமது நாடு எவ்வாறாவது உடனடியாக மீண்டெழ வேண்டும். இல்லையேல் மக்களின் இன்றைய நெருக்கடிகள் மேலும் தீவிரமடைவதற்கான ஆபத்தே தென்படுகின்றது. மக்கள் இதனை விட மேலும் நெருக்கடியைத் தாங்கிக் கொள்வதென்பது இயலாத காரியமாகும்.

இன்று எமது நாட்டுக்குத் தேவையாக உள்ளது வெறுமனே அரசியல் மாத்திரமல்ல. வீழ்ச்சியடைந்து போயுள்ள பொருளாதாரத்தை துரித கதியில் மீளக்கட்டியெழுப்புவதற்கான செயல்திட்டங்களே மிகவும் அவசியமாகவுள்ளன. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலையேற்றம், எரிபொருட்களுக்கான நீண்ட கியூ வரிசை போன்றனவெல்லாம் விரைவில் முடிவுக்கு வந்து தாங்கள் நெருக்கடியற்று நிம்மதியாக வாழும் சூழல் உருவாக வேண்டுமென்பதே சாதாரண மக்களின் ஏக்கம் ஆகும்.

உணவு உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் அரசினால் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. மனைப் பொருளாதாரம் போன்ற சில திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. வீட்டுத் தோட்டச் செய்கையில் கவனம் செலுத்துமாறு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. நெற்செய்கையை அதிகரிக்கும் வகையில் இரசாயனப் பசளை இறக்குமதிக்கும் அரசாங்கம் தற்போது ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அதேசமயம், எமது அயல்நாடான இந்தியாவும் அசேதன உரத்தை இலங்கைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இலங்கைக்கு வெறுமனே உணவு நிவாரணத்தை வழங்குவது மாத்திரமன்றி விவசாயத்துறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் இந்தியா இவ்வாறான உதவிகளை வழங்கி வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது. எனவே நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான துரித ஏற்பாடுகளை மேற்கொள்வதே இன்றைய நிலையில் அவசரத் தேவையாக உள்ளது.

எமது நாட்டின் இன்றைய நெருக்கடியான நிலைமை குறித்த புரிதல் நம் எல்லோருக்கும் தற்போது அவசியம். எதிர்காலத்தில் நாட்டுக்கு ஏற்படப் போகின்ற பாரிய சிக்கலாக உணவுப் பற்றாக்குறை இருக்கலாமென்ற எச்சரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. அந்த எச்சரிக்கை அறிவிப்புகளை அலட்சியம் செய்து விட முடியாது. மக்கள் ஒவ்வொருவரும் சிறிதளவாவது ஏதேனுமொரு பயிர்ச்செய்கையில் ஈடுபடத் தொடங்குவார்களானால் உணவு நெருக்கடியின் தாக்கத்தை ஓரளவேனும் தணிக்க இயலும்.

editor.tkn@lakehouse.lk

# பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருடன் நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் சந்திப்பு

இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் Michael Appleton அண்மையில் பத்தரமுல்லிலுள்ள பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அவர்களை சந்தித்து உரையாடினார்.

இச்சந்திப்பில், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, இளைஞர்களின் எதிர்ப்பு மற்றும் சாத்தியமான தீர்வுகள், நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமைகள் குறித்து விசேடமாக ஆராயப்பட்டது.

இலங்கைக்கும் நியூசிலாந்துக்கும் இடையில் தற்போதுள்ள இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து கடல் எல்லைகளில் இலங்கையர்கள் சட்டவிரோதமாக குடியேறுவது குறித்தும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது.



இக்கலந்துரையாடலின் போது, நியூசிலாந்து உயர்ஸ்தானிகர், பொதுபாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கை பொலிஸ் அதிகாரிகளின் நலன்புரி விடயங்களுக்கு நியூசிலாந்து அரசாங்கம் தங்களது பூரண ஆதரவை வழங்கும் எனத் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக புதிதாக நியமிக்கப்பட்டதற்கு நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார். பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சியும் இச்சந்திப்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

றிசாத் ஏ காதர்...
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# கண்டியில் ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்யும் இடங்களுக்கு கூடுதல் முன்னுரிமை

கண்டி மாவட்டத்தில் ஏற்றுமதி சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் உள்ளிட்ட பல அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு அதிக முன்னுரிமை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏற்றுமதி வருமானத்தின் முன்னோடிகளுக்கு தொடர்ச்சியான வசதிகளை வழங்கும் வகையில் கண்டி மாவட்டத்தின் பல்லேகலேயில் அமைந்துள்ள கைத்தொழில் பூங்கா, முதலீட்டுச் சபை, நீர் இறைக்கும் நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகள் ஆகியனவற்றிற்கும் முன்னுரிமை வழங்குவது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவைகளை பராமரிப்பது குறித்து, கண்டி மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் இதனைத் தெரிவித்தார். மேலும் எரிபொருள், மின்சாரம், சமையல் எரிவாயு, பொது போக்குவரத்து மற்றும் உணவு விநியோகங்களை பராமரிப்பது குறித்தும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டால், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நிர்வாகப் பிரிவுக்கு எரிபொருள் நிரப்பும் முறைமை குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், பொதுப் போக்குவரத்து சேவைகளை தொடர்ந்தும் பேணுவதற்காக இலங்கை போக்குவரத்து சபையின் யட்டிநுவர டிப்போவிற்கு எரிபொருளை வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் மினிப்பே நீர்ப்பாசன திட்டத்தில் விவசாயிகளுக்கு விவசாயத்திற்குத் தேவையான எரிபொருளை வழங்குவது குறித்தும் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. எதிர்காலத்தில் எரிவாயு விநியோகம்தொடர்பில் குறைபாடுகள் உருவாகின்ற பொழுது, விறகு அல்லது மாற்று முறைகளை பயன்படுத்த வேண்டும் எனவும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமைத்த உணவுக்குப் பதிலாக உலர் உணவுகளை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. மாவட்டத்தில் கூடுதல் அதிகாரிகள் காணப்படும் பட்சத்தில் அவர்கள் மூலமாக விசேட உணவுப் பயிர்கள் பயிரிடுவது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது காலத்துக்கு உகந்தது எனத் தெரிவித்த மாவட்ட செயலாளர், வீட்டுத் தோட்டம் திட்டங்களை நடைமுறைப் படுத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.





விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் இடையே சரியான ஒருங்கிணைப்பு இல்லாததால் இடைத்தரகர்கள் பெரும் இலாபம் ஈட்டுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இடைத்தரகர்களை குறைத்து, வர்த்தகத்தை பராமரிக்க, சம்பந்தப்பட்ட வர்த்தக சங்கங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதிக இலாபம் ஈட்டும் நோக்கத்தில் பண்டங்களை மறைத்து களஞ்சியப்படுத்த வேண்டாம் என கேட்டுக் கொண்ட மாவட்ட செயலாளர், அவ்வாறு விலை அதிகரிப்பதைத் தடுக்கும் வகையில், பரிசோதனைகளை ஆரம்பிக்க நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்.

இக்கலந்துரையாடலில் கண்டி மேலதிக மாவட்ட செயலாளர்களான உத்பல ஜயரத்ன மற்றும் லலித் எட்டம் பாவல, கண்டி மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஏனைய உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

எம்.ஏ.அமீனுல்லா...

# கொழும்பு துறைமுக நகரம் அறிமுகப்படுத்தியுள்ள அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள் (D.C.R)

கொழும்பு துறைமுக நகரத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் முதலாவது விசாலமான நகர அபிவிருத்தி ஒழுங்குமுறையான அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள் (DEVELOPMENT CONTROL REGULATIONS) சமீபத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுடன், தற்போது அந்த ஒழுங்குமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. DCR பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி கொழும்பு துறைமுக நகரத்தில் 09.06.2022 அன்று கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டது.





DCR ஆனது, CHEC Port City Colombo என்ற திட்ட நிறுவனத்தால் கடந்த 2018 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆசியாவின் மிகப் பெரிய நகர்ப்புற, தொழில்துறை மற்றும் உட்கட்டமைப்பு ஆலோசனை நிறுவனங்களில் ஒன்றான சிங்கப்பூரை தளமாகக் கொண்ட Surbana Jurong இனால், இங்கிலாந்தை தளமாகக் கொண்ட முக்கிய பொறியியல் ஆலோசனை நிறுவனமான Atkins உடைய தொழில்நுட்ப உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

DCR ஆனது சுவீடனை தளமாகக் கொண்ட திட்டமிடல் ஆலோசகரான SWECO இனால் வடிவமைக்கப்பட்ட Port City master plan இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கு முன்னர், இலங்கை நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அது தொடர்பான அரச நிறுவனங்களால் DCR மேலதிக மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிரியத் பந்து விக்கிரம நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கியதுடன், இலங்கையின் ஏனைய நகர அபிவிருத்திகளுக்கு ஒரு அளவுகோலாக இருக்கக் கூடிய DCR ஐ அறிமுகப்படுத்தி அதன் முக்கியத்துவத்தை பற்றியும் விளக்கினார். கொழும்பு துறைமுக நகரத்துக்குள் DCR ஐ நடைமுறைப்படுத்துவதில் மற்றைய அரசு பங்குதாரர் நிறுவனங்களின் பங்கு மற்றும் பொறுப்பு குறித்தும் கலாநிதி விக்கிரம விளக்கினார்.

கரையோரப் பாதுகாப்பு வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ரணவக்க, சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கப்டன் தேமிய சமந்த, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் / பணிப்பாளர் நாயகம் L.V.S. வீரக்கோன், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், லலித் விஜேரத்ன மற்றும் தீயணைப்புத் திணைக்களத்தின் பிரதான தீயணைப்பு அதிகாரி PDKA வில்சன், தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்தன, தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பின் சிரேஷ்ட விஞ்ஞானி சிந்தக ரத்னசிறி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் பாதுகாப்பு பிரதி பணிப்பாளர் நாயகம் கலாநிதி சஞ்சய ரத்நாயக்க, மத்திய சுற்றாடல் முகாமைத்துவ மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் N.S கமகே, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சட்டப் பணிப்பாளர், மஞ்சுள விமலசேன, CHEC port city நகர திட்டமிடல் முகாமையாளர் அருண பண்டார மற்றும் CHEC port city இன் ஆலோசகர் WADD விஜேசூரிய ஆகியோரும் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

கொழும்பு துறைமுக நகரத்துக்கான அபிவிருத்திக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் அபிவிருத்தியாளர்கள், குடியிருப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சுற்றியுள்ள சமூகம் உட்பட ஒவ்வொரு பங்குதாரர்களுக்கும் பயனளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு துறைமுக நகரத்தின் அடுக்குகளில் கட்டடங்களின் வளர்ச்சி வேகம், அமைப்பு மற்றும் உயரம் ஆகியவற்றை DCR ஒழுங்குபடுத்தும். தர்க்கரீதியான மற்றும் முறையான வளர்ச்சியைக் கட்டுப்படுத்த இது ஒரு பயனுள்ள திட்டமிடல் கருவியாக செயற்படும். DCR ஆனது நில உரிமையாளர்கள் மற்றும் அபிவிருத்தியாளர்களுக்கு நகரத்தில் உள்ள எந்தவொரு குறிப்பிட்ட நிலத்திலும் என்ன அமைக்கலாம் என்பது பற்றிய தெளிவான படிமத்தை வழங்குகிறது.

# அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் தொழில் முனைவோருக்கு பயிற்சிப் பட்டறை

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் சுயதொழில் ஈடுபட்டு வரும் தொழில் முனைவோருக்கான 05 நாட்கள் கொண்ட பயிற்சிப் பட்டறை அக்கரைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அக்கரைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் ஏ.கே.றொசின் தாஜ் தலைமையில் நடைபெற்ற பயிற்சிப்பட்டறையை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் யூலீட் நிறுவனமும் இணைந்து நடத்தின.

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அக்கரைப்பற்று பிரதேச சபை, அக்கரைப்பற்று மாநகரசபை எல்லைக்குள் 28 கிராம சேவையாளர் பிரிவுகளில் வசிக்கும் 28 சுயதொழிலில் ஈடுபட்டுவரும் நபர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சியில் கலந்து கொண்டனர். இவற்றில் சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களும், பெறாதவர்களும் அடங்குவர்.





ஆரம்ப காலம் முதல் பல வருடங்களாக சிறியளவில் சுயதொழிலாக வீடுகளிலும் ஏனைய இடங்களிலும் தங்களது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தும் நோக்கில் சுய தொழிலில் ஈடுபட்டு வரும் நபர்கள் அவற்றை மேலும் விருத்தி செய்து வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியாமல் இருந்து வருகிறார்கள். இதற்கு பிரதான காரணமாக முகாமைத்துவம், முதலீடு, சந்தைப்படுத்தக் கூடிய திறன் என்பனவற்றில் குறைபாடுகளும் காணப்படுகின்றன.

(06ஆம் பக்கம் பார்க்க)

எம்.எல்.சரிப்டீன்...
(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

# கல்முனை கடற்கரை கண்ணகி அம்மன் ஆலய கும்பாபிஷேகம், திருக்குளிர்த்தி



த்தர்களால் 'சிவபூமி' என அழைக்கப்பட்ட இலங்கைத் திருநாட்டின் கிழக்குக்கரையில் கல்முனை பதியில் கடற்கரையை அண்டிய ரம்மியமான சூழலில் அன்னை கண்ணகித் தாய் கோயில் கொண்டு, அண்டிவரும் அடியவர்களுக்கு அருள்மழை பொழிந்து அருளாட்சி நடத்திக் கொண்டிருக்கின்றார். வைகாசி பிறந்து விட்டாலே, கிழக்கு மாகாண இந்து மக்கள் மத்தியில் கண்ணகி அம்மன் வழிபாட்டிற்கான தெய்வீக வாசனை பரவத் தொடங்கி விடும்.

அந்த வகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீகடற்கரை கண்ணகி அம்மன் ஆலயத்திலும் உற்சவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாலயம் ஒரு சமூகத்தினரால் உருவாக்கப்பட்டு பன்னெடுங் காலமாக மரபுகள் மாறாத வண்ணம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. சடங்கு முறையிலான வழிபாட்டு அம்சங்களைக் கொண்ட இவ்வாலயத்தினை நிர்வகிப்பதற்கு இவ்வாலயத்திற்கு சொந்தமான பொதுமக்கள் எட்டு குடிகளாக வகுக்கப்பட்டு குடிக்கொருவராக எட்டு பேர் தேர்ந்தெடுக்கப்படுவதோடு, வருடாந்த பொதுக்கூட்டமொன்றில் பொதுச்சபையில் ஒவ்வொருவராக ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபை அமைக்கப்படும்.

இந்நிர்வாக சபையின் ஆயுட்காலம் மூன்று வருடங்களாக அமையும். தேவை ஏற்படின் அந்த அந்த குடியினரது ஒப்புதலோடு நிர்வாக சபை அங்கத்தவர்களில் பொதுக்கூட்டமொன்றில் மாற்றம் கொண்டு வர முடியும். ஊரில் நடக்கின்ற நன்மை தீமைகளில் நிர்வாக சபை பங்கெடுத்துக் கொள்வதோடு சிறுபிணக்குகளை பஞ்சாயத்து முறையில் அணுகி அவற்றுக்கான தீர்வுகளையும் வழங்கி வருகின்றது.

கல்முனை மாநகரில் அமைந்திருக்கின்ற அருள்மிகு ஸ்ரீ தரவைச்சித்தி விநாயகர் ஆலயமும்,இதே நிர்வாக சபையின் ஆளுகையின் கீழ் பரிபாலனம் செய்யப்படுகின்றது. இயற்கையின் சீற்றம், இனவன் முறைகள் போன்ற காரணங்களினால் கண்ணகி அம்மன் ஆலயம் சிதைக்கப்பட்டாலும் மீண்டும் மீண்டும் புதுப்பொலிவுடன் நிமிர்ந்து காட்சி தருவது எமது கண்ணகி தாயின் அருட்கடாட்சத்திற்கு ஆதாரமாக அமைந்து விடுகின்றது.



குலதெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் மிளிர்கின்ற கண்ணகி தாயாரின் அருளால் அன்னையை ' நாற்பத்திரண்டு அங்குல உயரமும், இருபத்துநான்கு அங்குல அகலமும் உடைய பெரியதொரு தாம்பூல விக்கிரகத்தில் காணக் கூடிய பாக்கியம் கிடைத்திருக்கிறது. ஊர்மக்களின் பெரும் நிதிப்பங்களிப்புடன் இந்தியாவில் செய்யப்பட்ட அன்னையின் திருவுருவச்சிலையினை ஆலயத்திற்கு கொண்டு சேர்ப்பதில் கல்முனை 3 ஐச் சேர்ந்த திரு.திருமதி.தர்ஷன் பிரௌவியா குடும்பத்தினர் அளப்பரிய பங்களிப்பினை ஆற்றியிருந்தார்கள்.

பலநூறு ஆண்டு பழைமை வாய்ந்த இந்த ஆலயத்தில் இவ்வாண்டு புதிய அம்மன் சிலை பிரதிஷ்டையுடன் கூடிய புனராவர்த்தன கும்பாபிஷேகம் செய்வதற்கு கண்ணகி தாயார் அருள்பாலித்திருந்தார். அதன்படி, 01.06.2022 முதல் 03.06.2022 வரையான மூன்று தினங்கள் நடந்தேறின.

இந்த கும்பாபிஷேக நிகழ்வுகள் சிவஸ்ரீ. சண்முக மஹேஸ்வர குருக்கள்(பிரதம குருதிருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயம், காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம்) தலைமையில் ஆலயத்தில் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் இடம் பெற்றன.



முதல் நாள் நிகழ்வாக அருள்மிகு ஸ்ரீ தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருந்த பரிவாரத் தெய்வ சிலைகளுடன் புதிதாக கொண்டுவரப்பட்ட அம்மன் சிலையானது பக்தர்கள் புடைசூழ, அண்மைக் கிராமங்களான பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு போன்ற ஊர்களுக்கு அடியவர்களின் தரிசனத்திற்காக நகர்வலமாகச் சென்று பிற்பகல் 2.00 மணியளவில் கடற்கரை கண்ணகி அம்மன் ஆலயத்தை அடைந்து புதிய சிலைக்கு உரிய பூசை முறைகள் செய்யப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இரண்டாவது தினத்தில் அருள்மிகு ஸ்ரீ தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து பெருந்திரளான அடியவர்கள் பாற்குடம் சுமந்து,பக்திபூர்வமாக பாற்குட பவனியில் கலந்து கண்ணகி அம்மன் ஆலயத்தை வந்தடைந்து புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட அம்மனுக்கு பால்காப்பு சாத்தி அன்னையின் பெருங்கருணையினை பெற்றுக் கொண்டனர்.

மூன்றாம் நாள் காலை 6.42 மணி முதல் 7.40 மணி வரையுள்ள மிதுன லக்கின சுப வேளையில் சிவாச்சாரியார்களின் வேத மந்திர உச்சாடனங்களோடு சங்கு, நாதஸ்வர ஓசை ஒலிக்க திருக்குடமுழுக்கு பக்தர்களின் அரோகரா ஓசையோடு பக்தி பூர்வமாக இனிதே நிறைவு பெற்றது. அன்றைய தினம் ஆலயத்தில் இந்து இளைஞர் மன்றத்தினரின் அனுசரணையோடு அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படடு திருக்கதவு மூடப்பட்டது.

மீண்டும் வருடாந்த திருக்குளிர்த்தி உற்சவத்திற்காக,06.06.2022 இல் திருக்கதவு திறக்கப்பட்டது, வழமைபோல் எட்டு நாட்கள் சடங்கு. முறையிலான பூசைகளை எட்டு குடியினரும் தனித்தனியே பொறுப்பேற்று சிறப்புக் குன்றாது நடத்தி வருவது வழக்கம். இந்த பூசைநாட்களில் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனைகளுடன் நற்சிந்தனைகளும் இடம்பெறுவதோடு நேர்த்திக்காக பக்தர்கள் காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி ஏற்றுதல், அங்கப்பிரதிஷ்சை செய்தல் போன்ற பக்தி பூர்வமான நிகழ்வுகள் ஆலயத்தில் இடம்பெறுவது வழக்கம். உற்சவத்தின் இறுதிநாளான வைகாசித் திங்கள் தினத்தன்று அம்மனுக்கு திருக்குளிர்த்தி பாடல் பாடப்பட்டு திருக்கதவு பூட்டப்படும். அன்றைய தினம் ஆலயத்திலே அன்னதான நிகழ்வுகளும் இடம்பெறுவது வழக்கம்.

தொடர்ந்து ஆலயத்தில் பரிவார தெய்வங்களுக்கான மூன்றாம் சடங்கு மற்றும் எட்டாம் சடங்கு பூசைகளும் நடைபெற்று வருடாந்த உற்சவம் பூரணப்படுத்தப்படும். இந்நிகழ்வுகளை சிறப்பாகச் செய்து முடிப்பதற்கு ஆலய பரிபாலன சபையினருக்கு எட்டுக்குடித் தலைவர்கள், சிரேஷ்ட பிரஜைகள்;, இந்து இளைஞர் மன்றத்தினர் மற்றும் ஏனைய இளைஞர் அமைப்புக்களுடன் பொதுமக்களும் தங்களது பூரண ஆதரவினை வழங்கி வருவது சிறப்பு அம்சமாகும்.

**கி.கிருபைராஜா...**
*(செயலாளர், ஸ்ரீ தரவைச்சித்தி விநாயகர், கடற்கரை கண்ணகி அம்மன் ஆலயங்களின் பரிபாலன சபை) கல்முனை*

# லண்டனில் இன்று மலையக இலக்கிய மாநாடு: உலகெங்கிலுமிருந்து ஆர்வலர்கள் பங்கேற்பு

**லண்டலில் இன்று 11 ஆம் திகதி மலையக இலக்கிய மாநாடு நடைபெறுகின்றது. இலங்கையின் மலையகத் தமிழர்களின் எழுச்சிமிகு போராட்டங்களையும், போராட்டத்தை முன்னெடுத்த தலைவர்களைப் பற்றியும் விபரிக்கும் நூலான 'மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்' என்னும் தலைப்பிலான சி.வி.வேலுப்பிள்ளை எழுதி, மு.நித்தியானந்தனும் எச்.எச். விக்கிரமசிங்கவும் தொகுத்த நூல் இன்று அங்கு வெளியிடப்படுகின்றது.**

அந்நூலுக்காக 'தாய்' பதிப்பக உரிமையாளரான முனைவர் குமார் ராஜேந்திரன் எழுதியுள்ள முன்னுரை வருமாறு:

இலங்கையில் அண்மையில் மக்கள் நடத்திய போராட்டமும், அதையடுத்து அங்கு ஆட்சியில் நடந்த சில மாற்றங்களும் இப்போது சர்வதேச அளவில் கவனிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் சமகாலத்தின் தேவையைப் போல வெளிவருகிறது மு. நித்தியானந்தன் மற்றும் எச்.எச். விக்ரமசிங்க ஆகிய இருவரின் தொகுப்பில் உருவாகியிருக்கின்ற 'மலையக அரசியல்: தலைவர்களும், தளபதிகளும்' என்கின்ற இந்த நூல்.

இந்திய வம்சாவளி மலையலகத் தமிழர்கள் இலங்கையில் நடத்தப்பட்ட விதம் யாரையும் கலங்க வைக்கும். 1815 இல் இலங்கையைப் பிரிட்டிஷார் கைப்பற்றியதில் இருந்து தொடங்கியது இந்தப் பிரச்சினை.

குறைந்த கூலிக்கு அவர்கள் உருவாக்க நினைத்த தேயிலை, கோப்பித் தோட்டங்களுக்கு வேலை செய்ய ஆட்கள் தேவைப்பட்டார்கள். அதற்காக தமிழ்நாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை ஒப்பந்தக் கூலிகளாக இலங்கைக்கு ஆசை வார்த்தைகளைக் கூறி அழைத்துச் சென்றனர். அதற்கென கங்காணிகள் உருவானார்கள்.




**'மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்'– அமரர் சி.வி. வேலுப்பிள்ளை எழுதி தினகரனில் வெளியான கட்டுரைகள் நித்தியானந்தன், எச்.எச். விக்கிரமசிங்க ஆகியோரால் தொகுக்கப்பட்டு இன்று வெளியீடு: நூலுக்கு 'தாய்' பதிப்பக உரிமையாளர் முன்னுரை**

இலங்கைக்கு அவர்களை அனுப்பி வைப்பதற்கு முகாம்கள் உருவாக்கப்பட்டன. இராமேஸ்வரத்திற்கு நடந்தே அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்கள் இலங்கைக்கு பாய்மரக் கப்பலில் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து கண்டிக்குப் போவதற்கு முன்பு அவர்கள் பட்ட சொல்ல முடியாத சிரமங்களால் பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள்.

அவ்வளவு துன்பங்களையும் தாண்டி அங்கு சென்றவர்களைக் கொண்டு கோப்பி, தேயிலைத் தோட்டங்கள் உருவாகின. அந்தத் தேயிலை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு ஐரோப்பிய சந்தையில் அதற்கு இரண்டாவது இடம் கிடைத்து மில்லியன் கணக்கில் வருமானம் கிட்டியது.

இவ்வளவு வருமானம் கிடைத்தாலும், மிகக் குறைந்த கூலியே மலையகத் தமிழர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் வாழ்ந்த இடங்களில் போதுமான வசதிகள் இல்லை. சுகாதாரமும் இல்லை. நியாயமான கூலியை அவர்கள் கேட்டார்கள். வேலைநிறுத்தம் செய்தார்கள்.

அதைக் கடுமையாக ஒடுக்கினார்கள் ஆட்சியாளர்கள். போராடிய தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடந்து பலர் பலியானார்கள். இந்த அவலத்தை எதிர்த்தே மலையகத் தமிழர்கள் ஒன்று சேர்ந்தார்கள். போராடும் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

முதலில் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் ஒடுக்கினார்கள். அடுத்து இலங்கையில் ஆட்சிக்கு வந்தவர்கள் ஒடுக்கினார்கள். பசி, பட்டினியால் அண்டை நாட்டுக்குப் பிழைக்கப் போனவர்கள் மொழி, இனப்பாகுபாட்டால் ஒடுக்கப்பட்டார்கள். நூற்றாண்டுக்கு மேலாக இந்த ஒடுக்கு முறை தொடர்ந்தது. எதிர்வினையாக எதிர்ப்புக் குரல்களும் எழுந்தன. 1964 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ – சாஸ்திரி ஒப்பந்தம் போடப்பட்டு, இலங்கை உழைப்பால் உயர்த்திய தமிழர்களில் சுமார் 5 இலட்சம் பேர் தாயகம் திரும்பினார்கள்.

சுதந்திர இலங்கையில் தங்கள் வாக்குரிமை பறிக்கப்பட்ட போது அதை எதிர்த்தும் மலையகத் தமிழர்கள் போராடினார்கள். சட்டரீதியாக அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட போதும் போராடினார்கள்.

அப்படி மலையகத் தமிழர்களுக்காகப் போராடிய தலைவர்களைப் பற்றிய வரலாற்றைப் பதிவு செய்திருக்கின்ற இந்த நூல் காலத்தின் முக்கிய வரலாற்று ஆவணம்.

இதில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்காக உழைத்து, 1947இல் இலங்கை நாடாளுமன்றம் சென்று குரல் கொடுத்தவரான சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் தன்னுடைய சமகாலத்திய தொழிலாளர்களுக்கான தலைவர்களைப் பற்றி 195859 களில் இலங்கையிலிருந்து வெளிவரும் 'தினகரன்' நாளிதழில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

இதில் மலையகத் தலைவர்கள் 13 பேர்களைப் பற்றியும், மலையகத் தளபதிகள் 13 பேர்களைப் பற்றியும் அவருக்கே உரித்தான பாணியில் எழுதியிருக்கிறார்.

இலங்கை வாழ் மலையகத் தமிழர்களின் நலனுக்காகக் குரல் கொடுத்த கோ.நடேச ஐயர் முதல், தமிழ் தெரியாத நிலையிலும், மலையகத் தமிழர்களின் துயர் துடைக்க முனைந்தவரான அப்துல் அசீஸ் வரை கடந்த ஐம்பது ஆண்டுகளாக இலங்கை அரசியல் களத்தில் தவிர்க்க முடியாத தலைவராக விளங்கியவரான சௌமியமூர்த்தி தொண்டமான், ஜோர்ஜ் ஆர்.மோத்தா, பெரி சுந்தரம், கே.ராஜலிங்கம், ஐ.எக்ஸ் பெரேரா, எஸ்.பி வைத்தியலிங்கம், குஞ்சுப்பொரி சண்முகம், ஏ.எஸ். ஜோன், சாரநாதன், சி.எஸ்.சிவனடியான் என்று பல தலைவர்களைப் பற்றி அரிய செய்திகள் இதில் இடம்பெற்றிருக்கின்றன.

தளபதிகள் என்ற வரிசையில் எஸ்.சோமசுந்தரம், எஸ்.எம்.சுப்பையா, எஸ்.செல்லையா, கே. குமாரவேல் தொடங்கி இன்றும் வாழும் உதாரணமாக இருக்கும் முதுபெரும் அறிஞர் பி.பி. தேவராஜ் வரை பலரைப் பற்றிய செய்திகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன.





மலையக மக்களின் போராட்டமும், அவர்கள் போராடியதற்கான சூழலும் இதில் பதிவாகியிருப்பது முக்கியமானது. இன்றைய இளைய தலைமுறையினருக்கு தங்கள் மலையக மண்ணில் நடந்த ஒடுக்குமுறையையும், மக்கள் எழுச்சியையும் ஒரு சேரச் சொல்லும் இந்த நூலில் மலையகத்து மண் ஒட்டியிருக்கிறது.

இந்த நூலைப் பதிப்பித்தவர்களில் ஒருவரான மு.நித்தியானந்தன் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராகப் பணியாற்றிய கல்விப் புலத்திலிருந்து வருபவர். சென்னையில் க்ரியா அகராதித் திட்டத்தில் செயற்பட்டவர்.

லண்டனில் பொருளாதார சாஸ்திரத்தில் ஆசிரியராகவும் 'ஐரோப்பிய தீபம்' தொலைக்காட்சியின் செய்திப் பிரிவின் தலைவராகவும் பணியாற்றிய அனுபவங்கள் கொண்டவர்.

'கூலித்தமிழ்'என்ற இவரது ஆராய்ச்சி நூல் மலையகத்தின் எழுத்து இலக்கிய முயற்சிகளின் தோற்றத்தை ஆராயும் முன்னோடி நூலாகும். இந்நூல் தமிழக அறிஞர்களின் பெரும் பாராட்டைப் பெற்றிருக்கிறது. மலையக இலக்கியங்களைப் பேணுவதில் அக்கறை கொண்டவர் அவர்.

ஏற்கெனவே சி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் 'வீடற்றவன், 'நாடற்றவர் கதை' ஆகிய நூல்களைப் பதிப்பித்தவர். அவருடைய பதிப்பில் சி.வி. அவர்களின் நூல் பதிப்புப் பெறுவது சிறப்பு மிக்கது.

இதன் தொகுப்பாசியர்களில் ஒருவரான எனது அன்புக்குரிய நண்பர் எச்.எச். விக்கிரமசிங்க அவர்கள் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். வெளிநாடுவாழ் இந்திய மக்களின் நலனில் அதிக ஈடுபாடு கொண்டவர்.

எச்.எச்.விக்ரமசிங்க அவர்கள் கல்விமான் இர.சிவலிங்கம், எஸ்.திருச்செந்தூரன், எஸ்.எம்.கார்மேகம், பேராசிரியர். சோ சந்திரசேகரம் அவர்களின் வழிகாட்டலில் உருவானவர். மலையகம் சார்ந்த பல நூல்களை தன் சொந்த முயற்சியில் வெளியிட்டவர்.

மிகவும் பரவலான மட்டத்தில் உயர்ந்த கல்விமான்களின், சமூக செயற்பாட்டாளர்களின் தொடர்புகள் கொண்டவர். எண்ணிய எண்ணியாங்கு எய்யும் பண்பாளர் நல்லவே நினைக்கும் உயர் பண்பு அவருடையது.

மலையக எழுத்தாளர் மன்றப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். மலையக மக்களுக்காகவே உழைத்த தொழிற்சங்கத் தலைவர்கள், மலையக எழுத்தாளர்கள், கலைஞர்களைப் பற்றித் தொடர்ந்து இலங்கைப் பத்திரிகைகளில் எழுதி வருகின்றவர்.

இவர்கள் இருவரும் இணைந்துதான் இந்தத் தொகுப்பு நூலை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்த அரிய பணிக்காக மு. நித்தியானந்தன் அவர்களையும், எச்.எச்.விக்ரமசிங்க அவர்களையும் வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன்.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்த இந்தியாவின் ஒரு பகுதியான தமிழகத்தில் இருந்து அடிமைகளாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட மலையகத் தமிழர்களில் இன்றைய தலைமுறையினர் இந்த நூலை உருவாக்கி அதை லண்டனில் வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

இந்நூலைத் தாய் வெளியீடாக வெளிக்கொண்டு வருவதற்காக அதன் பதிப்பாளர் என்ற முறையில் பெருமைப்படுகிறேன்.

**லண்டன் மலையக இலக்கிய மாநாடு 2022 நிகழ்ச்சி நிரல்:**

லண்டன் மலையக இலக்கிய மாநாடு இன்று நடைபெறுகின்றது. மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும் நூல் வெளியிடப்படுவதுடன் ஏழு அரங்குகளில் 31 நூல்கள் விமர்சனம் செய்யப்படும்.

அதனைத் தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் வருமாறு:
மௌன அஞ்சலி, வரவேற்புரை: கே.கே.ராஜா
அரங்கத் தலைமை அறிமுகம் : நவரட்னராணி சிவலிங்கம்

1. காத்தாயி அரங்கு
   தலைமை மு.நித்தியானந்தன்
   பி.பெரியசாமியின் 'தோட்டத் தொழிலாளரின் வீரப் போராட்டம் '
   எஸ்.தினேஷ;குமார்
   மல்லியப்புசந்தி திலகரின் 'மலைகளைப் பேச விடுங்கள்'
   ந.சரவணன் (நோர்வே)
   வரதன் கிருஷ;ணாவின் 'வெந்து தணியாத பூமி'
   எம்.பௌசர்
   மலையகப் பாடல்: கோகுலரூபன்
   கந்தப்பளை தாமரை யு.யோகாவின் 'எங்கள் தோட்டம்'
   கோகுலரூபன்
2. இர.சிவலிங்கம் அரங்கு
   தலைமை: செல்லத்தம்பி சிறிக்கந்தராசா
   கீத பொன்கலத்தின் 'இருபத்தோராம் நூற்றாண்டில் மலையகத் தமிழர் எதிர்நோக்கும் சவால்கள்
   கரவைதாசன் (டென்மார்க்)
   மைத்ரி ஜெகதீசனின் வுநய யனெ ளுழடனையசவைல
   சதீஸ் செல்வராஜாவின் 'குளிரும் தேசத்து கம்பளிகள்'
   ராகவன்
   மு.நித்தியானந்தனின் 'கூலித்தமிழ்'
   தோழர் ச.வேலு
   மலையகப் பாடல்: நிர்மலா ராஜசிங்கம்
3. கோகிலம் சுப்பையா அரங்கு
   தலைமை : மீனாள் நித்தியானந்தன்
   எஸ்தரின் 'பெருவெடிப்பு மலைகள்'
   கோணாமுட்டாவையூர் இரா.இராஜகோபாலின் 'முகவரி இல்லாத மனிதர்கள்'
   நவஜோதி யோகரட்னம்
   பதுளை சேனாதிராஜாவின் 'குதிரைகளும் பறக்கும்'
   பூங்கோதை
   பிரமீளா பிரதீபனின் 'விரும்பித் தொலையும் ஒரு காடு'
   புதுக்கோட்டை தங்கவேலுவின் 'கறிவேப்பிலைகள்'
   மாதவி சிவலீலன்
4. சோ.சந்திரசேகரம் அரங்கு
   தலைமை : க.ஆதவன் (டென்மார்க்)
   சோ.சந்திரசேகரனின் 'இலங்கை இந்தியர் வரலாறு'
   யோகேஸ்வரி விஜயபாலனின் நுனெடநளள ஐநெஙரயடவைல
   வு͏hந சுiபாவள ழக வாந Pடயவெயவழைn வுய அடைள in ளுசi டுயமெய
   டாக்டர். எஸ்.தம்பிராஜா
   எம்.வாமதேவனின் 'நீங்காத நினைவுகளில் '
   இர.ராமலிங்கம்
   திருச்சி தமிழகனின் 'மலையகமும் மறுவாழ்வும்'
   பி. சிவஞானம்
5. சி.வி.வேலுப்பிள்ளை அரங்கு
   தலைமை : வி.சிவலிங்கம்
   ந.சரவணனின் 'கள்ளத்தோணி'
   யமுனா ராஜேந்திரன்
   இரா.சடகோபனின் 'தேத்தண்ணி'
   சந்தோஷ; பரராஜசிங்கம்
   பிரதம அதிதிக்கு விருது வழங்குதல்
   **நூல் வெளியீட்டுரை:**
   சி.வி.வேலுப்பிள்ளையின் 'மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்'
   மு.நித்தியானந்தன்
   பிரதி வழங்குதல்
   பிரதம விருந்தினர் உரை: எச்.எச்.விக்ரமசிங்க (இலங்கை)
6. தமிழோவியன் அரங்கு
   தலைமை: மாதவி சிவலீலன்
   மு.சிவலிங்கத்தின் 'மழைக்காலத்து வெயில்'
   மீனாள் நித்தியானந்தன்
   மலரன்பனின் 'பால்வனங்களில்'
   அஞ்சனா
   மாத்தளை சோமுவின் 'கண்டிச் சீமையில்'
   பாரதி சிவராஜா
7. சாரல்நாடன் அரங்கு
   தலைமை: நா.சபேசன்
   அல் அஸூமத்தின் 'அறுவடைக்கனவுகள்'
   எம்.என்.எம். அனஸ்
   அரு.சிவானந்தனின் 'வண்ணச் சிறகுகள்'
   சுகன் (பாரிஸ்)
   ஆலம்பட்டு சோ.உலகநாதனின் 'சிங்களத் தீவினில் தீனர்களின் தொண்டர் கே.இராஜலிங்கம்'
   சி.வி.யின் 'தேயிலைத் தோட்டத்திலே...' தமிழில் :இரா.தம்பித்துரை
   எச்.எச்.விக்ரமசிங்கவின் 'எஸ்.எம்.கார்மேகம் : 'வாழ்வும் பணியும்'
   மாலதி பாலேந்திரனின் 'அம்மாயிக்கல்லு'
   கோவுஸ்ஸ கே.ராம்ஜி உலகநாதனின் 'தேயிலைப் புஷ்பங்கள்'
   மாத்தளை செல்வராஜின் 'காவேரி'
   மு.நித்தியானந்தன்
   பொன் பிரபாகரனின் 'காமன் கூத்து'
   பால சுகுமார்
   கலைஞர் கார்த்திகேசு, கவிஞர் பொன் பூபாலன் இருவருக்கம் அஞ்சலி உரை.
   மு.நித்தியானந்தன்.
   கலந்துரையாடல்
   நன்றியுரை: எஸ். சாந்தகுணம்
   ஒருங்கிணைப்பு: கே.கே.ராஜா

முனைவர் **குமார் ராஜேந்திரன்...**
*(மனித உரிமை ஆர்வலர், பதிப்பாளர், தாய் வெளியீடு, சென்னை)*
*me@kumarrajendran.in*

## குடிவரவு திணைக்களத்தில்...

எனினும் ஏப்ரல் மாத இறுதியில் இருந்து நிலவும் அசாதாரண தேவையினால் இந்த சேவையை வழங்க முடியாதுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. வரிசையில் நிற்கும் பொது மக்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்குவதற்காக திணைக்களம் தனது சேவைகளை காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை நீட்டித்துள்ளதாக அறிவித்துள்ளது.

சேவை காலத்தை அதிகரித்த போதிலும் பிராந்திய அலுவலகங்களில் நிலைமை இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை என அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். வெளிநாட்டு பயணச் சேவைகளுடன் தொடர்புடைய புகைப்படக் கலைஞர்களும் வழக்கத்திற்கு மாறான தேவை மற்றும் தொழில்நுட்ப பலவீனங்கள் காரணமாக சிக்கல்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பசிலின் வெற்றிடத்திற்கு...

பணிப்பாளர் சபையில் இருந்தும் இராஜினாமா செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பசில் ராஜபக்ஷவின் இராஜினாமாவையடுத்து அடுத்த சில தினங்களில் புதிய பாராளுமன்ற உறுப்பினராக தம்மிக்க பெரேரா பதவிப் பிரமாணம் செய்து கொள்வாரென்றும், தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக தம்மிக்க பெரேரா பதவியேற்பார் என்றும் உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றிடமான தேசியப்பட்டியல் ஆசனத்திற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட தம்மிக்க பெரேராவின் பெயரை வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுமென ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

## நாங்கள் மிக மோசமாக...

நிலையை ஏற்படுத்தியது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். தனது குடும்பத்துக்கு அரசாங்கம் விரைவில் நிரந்தர விசாவை வழங்குமென தாம் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## இன்றும் GAS விநியோகம்...

2.5 மில்லியன் டொலர் பணம் செலுத்தப்படாமையால் இதுவரையில் எரிவாயுவை தரையிறக்கும் பணிகள் நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக, நேற்றும் எரிவாயு விநியோகம் முன்னெடுக்கப்படவில்லை.

சந்தையில் எரிவாயு இல்லாததால் நாட்டின் பல பாகங்களில் நேற்றும் எரிவாயுக் கொள்வனவு செய்வதற்காக எரிவாயு விற்பனை நிலையங்களுக்கு முன்னால் பொது மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர். சில பகுதிகளில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் அமைதியின்மையும் ஏற்பட்டது.

## புதிய அமைச்சர்களாக...

இந்நிலையில், குறித்த அமைச்சுகளுக்கு புதிதாக இரு அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அதற்கமைய, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சராக பவித்ரா வன்னியாரச்சி நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளதாக கூறப்படும் தம்மிக்க பெரேரா, தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார் என்றும் தெரியவருவதாக கூறப்படுகிறது.

## சுற்றுலாப் பயணிகளை... (03 ஆம் பக்கத்தொடர்)

நேரடியாகவும் மறைமுகமாகவும் சுற்றுலா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட்19 தொற்று நோயால் முடங்கியிருந்த சுற்றுலாக் கைத்தொழில் மீண்டும் இயல்பு நிலைக்கு மாறி வருகையில் ஏற்பட்ட நெருக்கடியான நிலைமை காரணமாக மீண்டும் அது வீழ்ச்சி அடைந்துள்ளது. சுற்றுலாத் துறையானது தேசிய பொருளாதாரத்தைப் போன்று, பெருமளவிலான மக்களின் தொழில் பாதுகாப்புக்கு தாக்கம் செலுத்தக்கூடிய ஒரு முக்கியமான துறையாக இருப்பதால் அது துரிதமாக மேம்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

நாடு பற்றிய தவறான கருத்து பிரசாரங்களை தூதரகங்கள் மூலம் சரி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறையில் ஈடுபடுகின்றவர்கள் எதிர்நோக்கும் எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

## காத்தான்குடியில்... (03 ஆம் பக்கத்தொடர்)

பணிப்பாளர் அன்வர்சதாத் தலைமையில் சென்ற அதிகாரிகள் குழு காத்தான்குடி அமானுல்லாஹ் வீதியில் அரிசி மூட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல சரக்கு விற்பனை நிலையமொன்றின் களஞ்சியசாலையை முற்றுகையிட்டதுடன் அங்கிருந்த அரிசி மூடைகளை மீட்டு அவ்விடத்திலேயே குறித்த அரிசி மூடை அனைத்தையும் அரசின் கட்டுக்காட்டு விலைக்கு பொது மக்களுக்கு விற்பனை செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.

கடை உரிமையாளர் பொது மக்களுக்கு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைக்கு அரிசியை விற்பனை செய்துள்ளார்.

உரிமையாளருக்கு எதிராக நுகர்வோர்அலுவல்கள்அதிகாரசபையின் மட்டக்களப்பு அலுவலக அதிகாரிகளினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சுற்றாடல் அமைச்சர் ... (03 ஆம் பக்கத்தொடர்)

எதிர்கொண்டுள்ள எரிபொருள் நெருக்கடியை தீர்க்க முறையான உதவிகள் இன்னும் ஆலோசனைகளை ஐக்கிய அரபு இராச்சியம் வழங்குதல் பற்றியே, இச்சந்திப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

நட்புறவு விஜயத்தை, மேற்கொண்டு ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள தொழில்வாய்ப்புக்களில் இலங்கையரை உள்வாங்குவது பற்றி கவனம் செலுத்துமாறும், ஐக்கிய அரபு இராச்சிய, அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டைக் கேட்டுக் கொண்டார். மேலும் இலங்கையில் முதலிடுவதற்கான சாத்தியங்களை அதிகப்படுத்துமாறும் தூதுவரிடம் அமைச்சர் ஹாபிஸ் கேட்டுக் கொண்டார். இச்சந்திப்பில் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க, முன்னாள் சிரேஷ்ட இராஜதந்திரி டி.இஷட். சம்சுதீன் உட்பட முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## MP ஒருவரை கொலை... (03 ஆம் பக்கத்தொடர்)

நாட்டில் கரும்புள்ளி ஏற்படுத்தப்பட்ட தினமாகும். அடக்குமுறை,தீவைப்பு,வன்முறை பரப்பப்பட்ட தினம் அது. பொலன்னருவை மாவட்ட எம்.பியான அவர் பிரதேச மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். அவரின் மறைவிற்கு எமது அனுதாபத்தை தெரிவிக்கிறேன்.

## இலங்கையருக்கு... (03 ஆம் பக்கத்தொடர்)

பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கும் சந்தர்ப்பங்களை உருவாக்குமாறும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்படி, சுகாதாரத் துறையில் அதிகளவில் வேலைவாய்ப்பைபுகளை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரபா மகா வித்தியாலயத்தில்... (03 ஆம் பக்கத்தொடர்)

டபிள்யூ.சீ.அஜித் விஜேசுந்தர, அத்தனகல்ல வலய கல்விப் பணிப்பாளர் கே.எல்.ஜீ.எல்.பிரியங்கணி, கம்பஹா, களனி வலயங்களின் பிரதிப் பணிப்பாளர் எம்.டி.எம். தௌசீர் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்று பிரதேச... (04ஆம் பக்கத் தொடர்)

செய்யும் தொழிலை தொடராக மேற்கொண்டு அபிவிருத்தி செய்வதற்கு குடும்பத்தின் தலைமைத்துவத்தை தாங்கும் நபருக்கு போதிய திறன் மிக முக்கியமானதாகும். இன்று பல இடங்களில் சுயதொழில் மேற்கொண்டு வருபவர்கள் மிகக் குறைந்த முதலீட்டுடன் மிகக் கூடுதலான வருமானத்தை பெற்று வருவதனை காணக் கூடியதாகவுள்ளது. குறிப்பிட்ட பிரதேசத்தின் மிகக் கூடுதலான நுகர்வுத் தன்மையை அறிந்து தங்களது சுயதொழிலை ஆரம்பிப்பது பிரதானமானதாகும். தொழில் முனைவோராக செயற்படும் நபர்களை ஊக்குவித்து, அபிவிருத்தி செய்யும் அறிவுரைகளை வழங்குவதன் மூலம் அவர்களையும் சிறந்த வருமானம் கொண்ட சுயதொழிலாளர்களாக உருவாக்கிக் கொள்ள முடியும்.

இதனைக் கருத்திற் கொண்ட அக்கரைப்பற்று சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் யூலீட் நிறுவனமும் இவ்வாறான திட்டங்களைக் கொண்ட 05 நாட்கள் பயிற்சிப் பட்டறையை நடத்தி சிறப்பாக நிறைவு செய்துள்ளன.

வளவாளர்களாக கல்முனை பிரதேச செயலக தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலி, சம்மாந்துறை பிரதேச செயலக தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் யூ.எல்.எம்.சலீம் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்கள். அக்கரைப்பற்று தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் எம்.பி.எம்.ஹுசைன், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லாஹ், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர், சமுர்த்தி கருத்திட்ட உதவியாளர் எம்.ஐ.முஹாஜீர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## 13 ஆம் திகதி திங்களன்று...

இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும்13 ஆம் திகதி அனைத்து அரசு மற்றும் அரசு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கும் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது, ஜூன் 14 செவ்வாய்க்கிழமை பொசன் போயா தினம் என்பதால் பொது விடுமுறை தினமாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து அதற்கு முன்னைய நாளான 13 ஆம் திகதி திங்கட்கிழமையையும் பாடசாலை விடுமுறையாகவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## இரு புதிய அமைச்சு பதவிகளை...

மற்றும் கூட்டுத்தாபனங்கள் என்பன இந்த அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கமைய, பாதுகாப்பு அமைச்சின் கீழிருந்த சில நிறுவனங்கள் தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த அமைச்சின் கீழ், ஸ்ரீலங்கா டெலிகொம், தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, தேசிய முதலீட்டுச் சபை, ஆட்பதிவு திணைக்களம், குடிவரவு, குடியகல்வு திணைக்களம், துறைமுகநகர் பொருளாதார ஆணைக்குழு, தரக்கட்டளை நிறுவகம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவகம் (ICTA), தாமரை கோபுரம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

## கடந்த 08 நாட்களில்...

மேல் மாகாணத்தில் டெங்கு நோயின் பரவலைக் குறைப்பதற்காக எதிர்வரும்15ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் தாங்கள் வாழும் சூழலை நுளம்புகள் பெருக்கம் அதிகரிக்காமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், 24 மணி நேரமும் காய்ச்சல் இருந்தால் டெங்கு சந்தேகத்தின் பேரில் தகுதியான மருத்துவரை அணுகி சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## அலுவலக சேவைகளை...

கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் விலை உயர்வால் மக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். அதேவேளை, பொதுப் போக்குவரத்துக்கு அதிக தேவை இருப்பதால், அதற்கு வசதிகளை வழங்குவதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கோட்டை ஜனாதிபதி மாளிகையில் (09) நடைபெற்ற போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ரயில்கள் மற்றும் பஸ்களுக்கு தொடர்ச்சியாக எரிபொருளை வழங்கும் பொறிமுறையொன்றின் அவசியம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. போக்குவரத்து சபைக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக தனியார் பஸ்களுக்கு இரவு வேளைகளில் எரிபொருள் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

Park & Driveமுறையை விரிவுபடுத்தவும், அதற்காக வாகனத் தரிப்பிட கட்டணத்தைக் குறைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட ரயில் நிலையங்களுக்கு அருகாமையில் வாகனத் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயுமாறு ஜனாதிபதி தெரிவித்தார். இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள ஒன்றிணைந்த நேர அட்டவணை முறையை குறுகிய பயண சேவைகளுக்கும் பயன்படுத்த முன்மொழியப்பட்டது. அலுவலக சேவைகளை இலக்காகக் கொண்டு புதிய ரயில் சேவைகளை தொடங்கவும் தற்போது இயக்கப்படும் ரயில்களுக்கான பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர்...

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதற்கும், சிங்கப்பூருக்கான இலங்கை ஏற்றுமதிகளுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் சிங்கப்பூர் அரசாங்கத்திடம் உதவி கோரினார்.

அத்துடன் சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க சிங்கப்பூர் அரசாங்கத்தின் ஆதரவையும் அமைச்சர் பீரிஸ் கோரினார்

நான்கு வருடங்களின் பின்னர் இலங்கையின் வெளிநாட்டமைச்சர் ஒருவரின் சிங்கப்பூருக்கான உத்தியோகபூர்வ விஜயமாக இது இடம்பெற்றுள்ளது.

இந்த விஜயத்தின்போதே அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். எதிர்வரும் 13ஆம் திகதி சிங்கப்பூரின் துணைப் பிரதமராக பதவியேற்கவிருக்கும் சிங்கப்பூரின் நிதி அமைச்சர் லோரன்ஸ் வோங்கையும் அமைச்சர் பீரிஸ் சந்தித்தார்.

சிங்கப்பூர் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் எஸ். ஈஸ்வரன் மற்றும் பல முக்கிய பிரமுகர்களுடன் இணைந்து, சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் கே. சண்முகம் இலங்கையின் வெளிநாட்டமைச்சருக்கு கடந்த 08ஆம் திகதி மதிய உணவு விருந்தளித்தார். சிங்கப்பூர் தரப்புடனான கலந்துரையாடலின் போது இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து கருத்து தெரிவிக்கப்பட்டது. அமைச்சர் பீரிஸ், இலங்கைக்கான நிதியுதவியைப் பெறுவதற்கும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதற்கும், சிங்கப்பூருக்கான இலங்கை ஏற்றுமதிகளுக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் சிங்கப்பூர் அரசாங்கத்திடம் உதவி கோரினார்.

தற்போது, சிங்கப்பூருக்கு சுகாதாரப் பணியாளர்களை குறிப்பாக செவிலியர்களை அனுப்புவதில் இரு நாடுகளும் நெருக்கமாக செயற்பட்டு வருகின்றன.

அமைச்சர் பீரிஸ், சிங்கப்பூரின் சிரேஷ்ட அமைச்சரும் சமூகக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சருமான தர்மன் சண்முகத்தை சந்தித்துப் பேசிய அதே வேளை, சிங்கப்பூரின் சுகாதார மற்றும் மனிதவள சிரேஷ்ட இராஜாங்க அமைச்சர் கலாநிதி கோபோகூன், இலங்கைக்கான சிங்கப்பூரின் வதிவிடமற்ற உயர்ஸ்தானிகர் சந்திர தாஸ், டெமாசெக் சர்வதேச அறக்கட்டளையின் தலைமை நிறைவேற்று அதிகாரியும், டெமாசெக் குழுமத்தின் துணைத் தலைவருமான (ஆசியா) பெனடிக்ட் சியோங் மற்றும் சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சின் சிரேஷ்ட பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினார்.

## இலங்கையில் குழந்தைகளுக்காக...

அரைவாசிப் பேருக்கு மனிதாபிமான உதவி தேவைப்படும் நிலை காணப்படுகிறது என யுனிசெஃப் இலங்கை பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,..

அடுத்த நான்கு மாதங்களுக்குள் அதிகமாக பாதிக்கப்படக் கூடிய மக்களின் அவசரத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான வேண்டுகோளை ஐக்கிய நாடுகள் வெளியிட்டுள்ளது. அடுத்த ஏழு மாதங்களில் குழந்தைகளின் அதிகரித்துவரும் தேவைகளுக்கு ஏற்ப அவற்றின் அளவை அதிகரிக்க பொறுப்பேற்க வேண்டும். இலங்கையிலுள்ள 1.7மில்லியன் பாதிக்கப்பட கூடிய குழந்தைகளின் உயிர்களை காப்பாற்றும் ஊட்டச்சத்து, சுகாதாரம், பாதுகாப்பான குடிநீர், கல்வி மற்றும் மனநல சேவைகளை வழங்கவும் 25.3 மில்லியன் அமெரிக்க டொலர்களை தற்போது யுனிசெஃப் கோரியுள்ளது.

குழந்தைகள் மன உளைச்சலுக்கு ஆளாகி வெறும் வயிற்றில் நித்திரைக்கு செல்கின்றனர். பல குழந்தைகள் தினமும் பாடசாலைக்கு சமுகமளிப்பதில்லை. மேலும் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கான மருந்துகள் மருத்துவமனையில் வேகமாக முடிவடைகின்றன. இப்போது நாங்கள் செயற்படவில்லை என்றால் அசாதாரண சூழ்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர் மற்றும் சிறுமிகள் மேலும் மோசமான நிலைக்கு தள்ளப்பட நேரிடும்.

தற்போதைய நெருக்கடிக்கு முன்னதாகவே தெற்காசியாவில் இலங்கை அதிக ஊட்டச்சத்து குறைப்பாடு விகித கணக்கெடுப்பில் இரண்டாவது இடத்தில் உள்ளது. மேலும் இலங்கையில் 05 குழந்தைகளில் 02 குழந்தைகளுக்கு போதுமான அளவு குறைந்தபட்ச உணவு வழங்கப்படுவதில்லை. உயர்ந்துவரும் உணவு பொருட்களின் விலையின் காரணமாக 70 வீத குடும்பங்களின் உணவு நுகர்வு குறைந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது. மேலும் எரிபொருள் நெருக்கடி மற்றும் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு குழந்தைகளுக்கான சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட முக்கிய சேவைகளை தடுக்கின்றது. குடிப்பதற்கும், வீட்டுப் பாவனைகளுக்கும் பாதுகாப்பான நீர் கிடைப்பது குறைந்து வருவதால், நீரினால் பரவும் நோய்கள் அதிகரிக்கக் கூடிய அபாயம் உள்ளது.

தற்போதைய நெருக்கடி, வறுமை, கோவிட்19 தொற்று மற்றும் தொடர்ச்சியான காலநிலை சீர்க்கேடுகளால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர், சிறுமிகளை மேலும் பாதிக்கின்றது. என்று ஸ்கூக் தெரிவித்துள்ளார். யுனிசெஃப் அதன் மனிதாபிமான வேண்டுகோளின் மூலம் இலங்கை குழந்தைகளுக்கு ஆதரவளிக்க நன்கொடையாளர்களைவலுவாகவலியுறுத்துகிறது.

## IMF இன் பிரதிநிதிகள் குழு ...

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவ தயாராக இருப்பதாக முகாமைத்துவப் பணிப்பாளர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் கோரிக்கைக்கு அமைவாக பணியாளர் மட்டத்திலான குழுவொன்று எதிர்வரும் 20ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் மட்டத்துக்குமிடையிலான உடன்படிக்கைகளை பொறுத்தே கடனுக்கான மேலதிக பணிகள் அமையுமெனவும், பிரதிநிதிகள் குழு சுமார் ஒரு வார காலம் இலங்கையில் தங்கியிருந்து கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## 22 சதவீத மக்களுக்கு...

குறைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இரசாயன உரப் பற்றாக்குறையினால் இந்த நிலைமை உருவாகியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இரசாயன உரங்களுக்கு தடை விதிக்கப்பட்டதனால் உர வகைகளின் விலைகள் 60 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 24,000Kg அப்பிள்...

துறைமுக அபிவிருத்தி விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வாவின் தீர்மானத்திற்கமைய அவற்றை அமைச்சர் நேற்று தெஹிவளை மிருககாட்சி சாலை அதிகாரிகளிடம் கையளித்தார்.

கொழும்பு சர்வதேச துறைமுகத்தின் சி.அய்.சி.டி பகுதிக்கு கடந்த பெப்ரவரி மாதம் சீனாவிலிருந்து ஆப்பிள் கொள்கலன்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆப்பிள் கொள்கலன்களை இறக்குமதி செய்தவர்கள் இதுவரையில் கொண்டு செல்லாமல் இருப்பது தொடர்பாக தனக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சி.அய்.சி.டி நிறுவனத்திடம் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்தே இவற்றை மிருகக்காட்சிசாலைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார். இது போன்று இன்னும் பல பொருட்கள் வீணாக்கப்படாமல் அல்லது அழிக்கப்படாமல் அதனை பிரயோசனமான ஒரு விடயத்துக்காக பயன்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் துறைமுக அதிகாரிகளுக்கு இதன்பொழுது பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்த கொள்கலன்களில் 24,000 கிலோ அதாவது சுமார் ஒரு இலட்சம் ஆப்பிள்கள் இருப்பதாக சி.அய்.சி.டி நிறுவனத்தின் பிரதானி ஜெக் உவாங் தெரிவித்தார்.

ஆப்பிள் தொகையின் பெறுமதி சுமார் இரண்டு கோடி பெறுமதி வாய்ந்தவையென துறைமுகத்தின் பணிப்பாளர் பிரபாத் ஜயந்த தெரிவித்தார்.

## மே 09 வன்முறைகளை...

கடந்த மே 20ஆம் திகதி அவர் சபையில் ஆற்றிய உரை தொடர்பில் அவர் மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் அவ்வாறு இல்லாவிட்டால் சம்பந்தப்பட்ட குழு மூலம் அவரை விசாரணைக்கு உட்படுத்தி அறிக்கை பெற்றுத்தர வேண்டும் என்றும் பிரதமர் நேற்று சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமரர் அமரகீர்த்தி அத்துகோரளவின் அனுதாபப் பிரேரணை விவாதத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டபோது நாம் அனைவரும் ஒன்றிணைந்து கண்டனம் தெரிவித்தோம். எனினும் எல்.ரி.ரி அமைப்பு அவரை விமர்சித்தது.

அதன்படி இந்த சபையில் நாம் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். அந்த வகையில் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அனைவரும் அத்துகோரள படுகொலை தொடர்பில் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டனர். ஒருவர் மட்டும் அதில் உள்ளடங்கவில்லை.

அவர் அதற்குத் துணை போனார். அதுவே கவலையளிக்கிறது.

## நாட்டின் இக்கட்டான...

உதவுமாறு ஊடக உரிமையாளர்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார். தேவையான போது ஊடகங்கள் அரசாங்கத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அதேவேளை பொறுப்பான அறிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இக்கலந்துரையாடலின் போது பிரதமரின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி சமரதுங்க, நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து பங்கேற்பாளர்களுக்கு விளக்கமளித்தார்.

சர்வதேச நாணய நிதியம் எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளதாக பிரதமர் ஊடக உரிமையாளர்களிடம் தெரிவித்தார். இந்த மாத இறுதிக்குள் பணியாளர் மட்டத்திலான உடன்பாடு எட்டப்படும் என்று நம்புவதாக அவர் விளக்கினார்.

நிலுவையில் உள்ள உணவுத் தட்டுப்பாடு காரணமாக, நாட்டில் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்குவதாகவும் அவர் விளக்கினார்.

உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் 03 வேளை உணவு வழங்க முடியாத 10% மக்களுக்கு அரசாங்கம் இலவசமாக உணவை வழங்க முடியும் என நம்புவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். அரசாங்கத்தின் முன்முயற்சிகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது, பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள சேதத்தின் காரணமாக அதன் விளைவுகளை நாடு அனுபவிக்க வேண்டியிருக்கும் என்று பிரதமர் விளக்கினார்.

## மடு மாதா ஆடிமாத...

காலை 10.30 மணியளவில் மன்னார் மா வட்டச் செயலகத்தில் நடைபெற்றது. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவண.இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் ,பிரதேச செயலாளர்கள்,திணைக்கள தலைவர்கள்,பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது கடந்த இரண்டு வருடங்கள் கொரோனா தொற்று காரணமாக அதிகமான மக்கள் மடு திருத்தலத்திற்கு வருகை தரவில்லை. எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆடி திருவிழாவுக்கு சுமார் 02 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வருகை தருவார்களென எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக சுகாதாரம்,போக்குவரத்து,குடிநீர்,மின்சாரம்,பாதுகாப்பு தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறை மடுத்திருத்தல பகுதிகளில் அதிக எண்ணிக்கையான உணவகங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்பனை செய்தால் சட்டநடவடிக்கை

*யாழ். விசேட, பருத்தித்துறை நிருபர்கள்*



யாழ்.மாவட்டத்தில் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையினை மீறி அரிசி விற்பனை செய்வோருக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய பொருளாதார நெருக்கடி பொருட்களுக்கான விலை அதிகரித்துள்ளது. பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்கும் வகையில் வியாபாரிகள் அத்தியாவசிய பொருட்களை மிகவும் நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும்.

அதேநேரத்தில் தற்போது அரசாங்கம் அரிசிக்குரிய கட்டுப்பாட்டு விலையினை நிர்ணயித்துள்ளது. நிர்ணயவிலைக்கு உட்பட்ட வகையில் பொருட்களை விற்கவேண்டும்.

சில்லறை விற்பனையாளர்களும் இவ்விடயத்தில் அதிக கவனம் எடுக்க வேண்டும். அரிசியை அதிக விலைக்கு விற்று பாவனையாளர்களை அதிக கஷ்டத்துக்குள்ளாக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றோம். அதே நேரத்தில் அரசாங்கம் நிர்ணயித்த விலையானது நியாயமான விலையாக காணப்படுகின்றது. எதிர்காலங்களில் யாழில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஊடாக விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

யாழ் மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினரின் கண்காணிப்பின் மூலம் கட்டுப்பாட்டுவிலையினை மீறி அரிசி விற்போருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

எனவே பொதுமக்களுக்கு கஷ்டம் ஏற்படுத்தும் வகையில் அத்தியாவசியப் பொருட்களை அதிக விலைக்கு விற்க வேண்டாம் என யாழ்ப்பாண வர்த்தக சமூகத்தினரிடம் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

# அறுவடைக்கு எரிபொருளை பெற்றுத் தருமாறு கோரிக்கை



*பரந்தன் குறூப் நிருபர்*

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட விவசாயிகள் அறுவடைக்கு எரிபொருளை பெற்றுத் தருமாறு கோரி கோரிக்கை விடுத்துள்ளனர்.

புளியம்பொக்கனை நெத்தலியாற்றுப் பகுதியில் கழிவு நீரைக் கொண்டு தண்ணீர் பம்பிமூலம் 150 ஏக்கருக்கும் மேற்பட்ட பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் திணைக்களம் ஊடாக பெறப்பட்ட சேதன உரத்தை கொண்டு பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடைக்கு தயார் நிலையிலுள்ளது.

இந்நிலையில் அறுவடை மேற்கொள்வதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னரே எரிபொருளை பெறுவதற்காக வரிசையில் வாகனம் நிறுத்தப்பட்டும் எரிபொருள் பெற முடியாத நிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இன்னும் சிலநாட்களுக்குள் எரிபொருள் கிடைக்கப்பெறாவிட்டால் நெற்கதிர்கள் சேதமடைந்து போய்விடும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையை கருத்தில் கொண்டு எமது கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எமக்கு எரிபொருளை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**தென்மராட்சி பிரதேசத்தில்**

# எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம்



*சாவகச்சேரி விசேட நிருபர்*

தென்மராட்சி பிரதேசத்தில் லாப் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் பதிவினை மேற்கொண்ட 300பேருக்கு நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி எரிவாயு விநியோக இடத்தில் வைத்து சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன.

முதற்கட்டமாக பதிவினை மேற்கொண்ட 300 பேருக்கே இவ்வாறு எரிவாயு சிலிண்டர்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. 12.5 கிலோகிராம் எடைகொண்ட எரிவாயு நிரப்பிய சிலிண்டர் ஒன்று 7 ஆயிரத்து நூறு ரூபாய்க்கு வழங்கி வைக்கப்பட்டது. தென்மராட்சி பிரதேசத்திற்கு இம்முறை 418 லாப் எரிவாயு சிலிண்டர்களே ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரயிலுடன் கார் மோதி விபத்து

## இருவர் உயிரிழப்பு



*யாழ்.விசேட நிருபர்*

யாழ்.அரியாலை நெடுங்குளம் பகுதியில் அண்மையில் ரயிலுடன் கார் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த சதுரங்க ரத்னாயக்க (வயது 34), மொஹமட் பாயிஸ் (வயது 31) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் வந்து கொண்டிருந்த ரயிலுடனே கார் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

அதேவேளை அரியாலை பகுதியிலுள்ள பல புகையிரத கடவைகள் பாதுகாப்பற்ற கடவைகளாக காணப்படுவதனால் ரயில் விபத்து சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அதனால் பாதுகாப்பான கடவைகளை அமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஊழலற்ற நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் துணை நிற்பேன்

*கோப்பாய் குறூப் நிருபர்*

நாட்டில் ஊழலற்ற நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பாராளுமன்றத்தில் துணை நிற்பேன் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நேற்று (10) வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இருவேறு வாக்கெடுப்புக்களில் வாக்களித்த பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கை மின்சார திருத்த சட்டமூலம் இன்று திருத்தங்கள் இன்றி நிறைவேறியுள்ள நிலையில், இச்சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கியத்துவமான திருத்த முன்மொழிவொன்றை பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சபையில் முன்வைத்திருந்தார்.

அதாவது, சட்ட மூலத்தின் 4ஆவது சரத்தில்; புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை தனியாருக்கு வழங்கும்போது 10MWற்கு மேற்பட்ட திட்டங்களுக்கு வெளிப்படைத்தன்மையுடைய கேள்வி கோரல்களை நடைமுறைப்படுத்த வேண்டும் எனும் திருத்த முன்மொழிவை சமர்ப்பித்திருந்தார்.

இந்த முன்மொழிவுக்கு ஆதரவாக 54 வாக்குகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த திருத்த முன்மொழிவுக்கு நானும் ஆதரவாகவே வாக்களித்தேன். தனியார் நிறுவனங்களுக்கு பாரிய திட்டங்களை கையளிக்கும்போது திறந்த கேள்விகோரல்கள் கடைப்பிடிக்கப்படுவதானது ஊழலற்ற நிர்வாகத்தை உறுதிப்படுத்தும்.



மாறாக கேள்விகோரல்கள் இல்லாமல் திட்டங்கள் கையளிக்கப்படுகையில் ஊழல்களும், மோசடிகளும் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

எமது நாட்டுக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் அவசியம் என்பதை நான் ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில், அந்த திட்டங்களை வழங்கும்போது அதில் ஊழல்கள் நடக்காமல் தடுக்க வேண்டியதும் மக்கள் பிரதிநிதிகளின் தார்மீக பொறுப்பாகும்.

அதன்படி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான வாக்கெடுப்பில் ஆதரவாகவும், ஹர்ச டி சில்வா அவர்கள் முன்வைத்த திருத்த முன்மொழிவுக்கு ஆதரவாகவும், எரிசக்தி அமைச்சர் முன்வைத்த 4ஆம் சரத்தின் திருத்தத்தோடு இலங்கை மின்சார திருத்த சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கான வாக்கெடுப்பில் எதிர்த்தும் வாக்களித்திருந்தேன்.

9 ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது நிறைவேற்றப்பட்ட இலங்கை மின்சார திருத்த சட்டமூலமானது, 25 MW மற்றும் அதற்கு மேற்பட்ட மின் உற்பத்தித் திறன் கொண்ட ஒருவருக்கு மின் உற்பத்தி உரிமம் வழங்குவதற்கான கட்டுப்பாடுகளை நீக்கி, உற்பத்தித் திறனில் தடையின்றி எவரும் விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்படுகின்றமை கவனிக்கத்தக்கது.

# வங்கிக் கட்டமைப்பு பற்றி தவறான வதந்திகளை ஏற்படுத்த வேண்டாம்

*கரவெட்டி தினகரன் நிருபர்*



வங்கிகளில் வைப்பிலுள்ள மக்களின் பணத்தை அரசாங்கம் பெற்று விடும் என்பதில் உண்மையில்லை என இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவி பொது முகாமையாளர் வ. சிவானந்தன் தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண பஸ் நிலைய கிளை திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

வங்கிகளில் மக்களால் வைப்பு செய்யப்பட்டுள்ள பணத்தை தற்போதையபொருளாதாரநெருக்கடியில் அரசாங்கம் எடுத்து விடும் என தெரிவிக்கப்படுவதில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் கொரோனா என்ற பெரும் சவாலை எதிர்கொண்டு இருந்தோம்.

அதேபோல நாடு தற்போது பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவை எதிர்கொண்டாலும் அதனை ஒரு சவாலாக எதிர்கொண்டு மக்களின் நம்பிக்கை, எங்கள் பங்களிப்பு எல்லாவற்றையும் சேர்ந்து இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கையிருக்கின்றது.

அதற்கு வங்கிக் கட்டமைப்பு என்பது பொருளாதா கட்டமைப்பில் இன்றியமையாத ஒன்றாகும். வங்கி கட்டமைப்பு என்பது இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்தை சமன் செய்ய முடியாது.

நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு வீழ்ச்சியடையுமாகவிருந்தால் நாடு அதாளபாதாள நிலைக்கு சென்றுவிடும். தற்போது மக்கள் பலருடைய எண்ணங்கள் வங்கிகளிலுள்ள பணத்தை அரசாங்கம் எடுத்துவிடக்கூடும் என்று பலவிதமாக யோசிக்கிறார்கள்.

உண்மையாகவே அது பொய்யானவிடயமாகும். வங்கி கட்டமைப்பு இந்த நாட்டில் இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரமானது அதாளபாதாளத்துக்கு சென்றுவிடும்.

எனவே வங்கி கட்டமைப்பை சீராக பாதுகாக்கவேண்டியதும் தொடர்ந்தும் செயற்பாட்டில் வைத்திருக்க வேண்டியதும் வாடிக்கையாளர்கள், பொதுமக்கள்தான். ஆகவே வங்கிக் கட்டமைப்பு பற்றி நீங்கள் தவறான வதந்திகளை புரிதலை ஏற்படுத்த வேண்டாம் என அவர் தெரிவித்தார்.

# தீக்காயங்களுக்குள்ளான இரு குடும்ப பெண்கள் உயிரிழப்பு

*யாழ். விசேட நிருபர்*





யாழ்பாணத்தில் இருவேறு சம்பவங்களில் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இரு குடும்ப பெண்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மருதங்கேணி உடுத்துறை பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் பிறேமலதா (வயது 43) என்பவர் கடந்த 08ஆம் திகதி தீ காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, அன்றைய தினமே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர் ஆசிரியராக யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து சுகவீனம் காரணமாக ஆசிரிய பணியில் இருந்து ஓய்வு பெற்றவர் என உறவினர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை யாழ்ப்பாணம் உடுப்பிட்டி பகுதியை சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான சுதாகரன் துளசிகா (வயது 28) என்பவர் கடந்த 6ஆம் திகதி தீ காயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு கடந்த 8ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# நெல்லியடி மத்திய கல்லூரியில் குளவிக் கொட்டு

*யாழ். விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய கல்லூரியில் குளவி கொட்டியதில் 08 பாடசாலை மாணவர்கள் மற்றும் 2 ஆசிரியர்கள் காயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மைதானத்தில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை மாணவர்கள், ஆசிரியர்கள் இருந்த வேளை குளவிக் கூட்டில் இருந்து கலைந்த குளவிகள் மாணவர்கள் ஆசிரியர்களை கொட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

# நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ முன்ஆயத்தம்

*பருத்திதுறை, யாழ்.விசேட நிருபர்கள்*

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் சிறப்பாக நடைபெறக்கூடியவாறு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம் என யாழ் மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்தார் .

நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் மஹோற்சவம் இடம்பெறவுள்ளது.

அந்நிலையில், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பிலான முன்ஆயத்தக்கூட்டம் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, திருவிழாவுக்கு தேவையான பாதுகாப்பு முன்னேற்பாடுகள், படகு மற்றும் தரை போக்குவரத்து சுகாதார நடைமுறைகள், உணவு, குடிநீர், மின்சார விநியோகம் மற்றும் வீதி திருத்தம் போன்ற மிக அத்தியாவசியமான தேவைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

அது தொடர்பில் மாவட்ட செயலாளர் தெரிவிக்கையில்,

அந்த வேலைகளுக்கு பொறுப்பான திணைக்களம் மற்றும் பிரதேச சபையினர் அதற்குரிய பொறுப்புகளை ஏற்று முன்னேற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி உள்ளேன்.

கடல் போக்குவரத்து காலை 6 தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெறக்கூடிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேபோல 12ஆம் திருவிழாக்கு பின்னர் இரவு 9 மணி வரை கடல் போக்குவரத்தினை தருமாறு கோரப்பட்டது. அதேபோல தரை போக்குவரத்தும் அவ்வாறே மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளோம்,

எனவே இதனுடைய விவரங்களை பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது, சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுவதாக தீர்மானித்துள்ளோம்,

குறிப்பாக பொலீத்தின் பாவனையை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளோம்,

நயினாதீவு ஆலய பிரதேசம் புனித பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் மதுஅருந்துதல், மாமிசங்களை விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆகவே பக்தர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அதேபோல படகு போக்குவரத்தில் ஈடுபடுகின்ற அத்தனை படகுகளும் தங்களுக்குரிய தகுதிச் சான்றிதழைப் பெற்ற பின்னரே சேவையில் ஈடுபட முடியும்,

அத்தோடு படகில் பயணிப்பவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு அங்கிகள் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். பாதுகாப்பு நடவடிக்கைகளை பொறுத்தவரை இலங்கை பொலிஸார் மற்றும் கடற்படையினரும் இணைந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

அத்தோடு மிக முக்கியமாக ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் தங்களுடைய பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பெறுமதியான பொருட்களை பாதுகாப்பாக பேணவேண்டும்.

ஏனெனில் தற்போதைய நெருக்கடி நிலையில் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.

அத்தோடு கடல் பயணம் மற்றும் தரை பயணங்களின் போது சிறுவர்கள் மற்றும் வயது குறைந்தவர்கள், முதியவர்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் தாங்களாகவே முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# தவறவிட்ட கையடக்க தொலைபேசியினை உரியவரிடம் ஒப்படைத்த இளைஞன்

*கிளிநொச்சி குறூப் நிருபர்*

கிளிநொச்சியில் தவறவிட்ட நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்க தொலைபேசியினை உரியவரிடம் இளைஞனொருவன் ஒப்படைத்துள்ளார்.

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் தனது 4 இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்க தொலைபேசியினை புலம்பெயர் நாடொன்றில் வருகை தந்தவர் தவறவிட்டுள்ளார். இந்நிலையில் அதனை கண்டெடுத்த கிளிநொச்சி புதுமுறிப்பு இளைஞனொருவன் தொலைபேசி உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளார்.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவருக்கு உதவிசெய்யும் முகமாக கிளிநொச்சிக்கு வந்து திரும்பிக் கொண்டிருந்த போதே புலம்பெயர் நாடொன்றிலிருந்து வருகை தந்தவர் கையடக்க தொலைபேசியை தவறவிட்டுள்ளார்.

இந்நிலையில் தொலைபேசியினை கண்டெடுத்த கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தைச் சேர்ந்த செல்லத்துரை தவக்குமார் என்ற இளைஞன் அதனை உரிமையாளரிடம் கையளித்துள்ளார்.




அக்கரப்பத்தனை

# டொரிங்டன் தோட்டம் கற்பாறைகள் சரிவு

## 70ற்கு மேற்பட்டோர் பாதிப்பு





(ஹற்றன் சுழற்சி நிருபர்)

அக்கரப்பத்தனை டொரிங்டன் தோட்டத்தின் பிரிவான மோர்சன் குடியிருப்பு பின்புறத்திலுள்ள மலையிலிருந்து பாரிய கற்பாறைகள் சரிந்து விழுந்தமையால் அப்பகுதியில் வாழும் 20 குடும்பங்களைச் சார்ந்த 70ற்கும் மேற்பட்டவர்கள் தொடர்ந்து அச்சத்தில் உள்ளனர்.

இத்தோட்டம் அமைந்திருக்கும் பகுதியில் பாரிய அளவிலான கற்பாறைகள் காணப்படுவதால் மழைக்காலங்களில் சரிந்து விழக்கூடிய நிலைமையே காணக்கூடியதாக இருப்பதாக மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு அதே பகுதியில் பாரிய கற்பாறைகள் சரிந்து விழுந்தமையால் குடியிருப்பு பகுதியில் வாழ்ந்த 50ற்கு மேற்பட்டவர்கள் தோட்டத்திலுள்ள பொது நிலையத்தில் தங்க வைக்கப்பட்டனர். அதன்பின்னர் மக்களின் பாதுகாப்பு கருதி இந்திய வீடமைப்பு திட்டத்தின் ஊடாக 46 வீடுகள் கட்டப்பட்டு அதில் குடியமர்த்தப்பட்டனர்.

இன்னும் எஞ்சிய 40 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் பாதிப்பான குடியிருப்பு பகுதியில் வாழ்ந்து வருகின்றனர்.

அத்தோடு இரவு நேரங்களில் சிறு பிள்ளைகளை வைத்துக்கொண்டு மழை காலங்களில் உயிர் அச்சத்துடன் வாழ்வதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். சரிந்து விழுந்த கற்களும் ஆங்காங்கே ஆபத்தான நிலையில் தேங்கி நிற்பதை காணமுடிகிறது.

பாதிக்கப்பட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

ஒவ்வொரு நாளும் இரவு பொழுதை மிகவும் அச்சத்துடன் வாழ்வதாகவும், அதிகாரிகள் எவரும் எங்களுடைய பிரச்சினைகளை கவனிப்பதில்லை எனவும், கற்பாறைகள் தொடர்ந்து சரிந்து விழுவதால் உயிர் ஆபத்துகள் ஏற்படக்கூடும் எனவும், ஆபத்தான நிலையில் இருக்கும் தமக்கும் வீடுகளை அமைக்கவும், எங்கள் உயிர் பாதுகாக்கப்படவும் வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

பலாங்கொடை தீ வைப்புச் சம்பவங்கள்

# 37 பேர் கைது 33 பேர் பிணையில் விடுதலை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவள பலாங்கொடை நகர சபைத் தலைவர் வசந்த குணரத்ன பலாங்கொடை பிரதேச சபைத் தலைவர் சுனில் பிரேமரத்ன ஆகியோரின் வீடுகள், சொத்துக்களை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் இதுவரை 37 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி சம்பவங்களை தொடர்புபடுத்தி தீயிட்டு கொழுத்தி சேதப்படுத்திய குற்றச்சாட்டில் இதுவரை 37 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பலாங்கொடை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து இவர்களில் 33 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டு ஏனைய நால்வரும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தர விட்டார். இவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்ல முடியாதவாறு நீதிமன்றம் பயணத் தடை செய்துள்ளது. மேலும் சீ.சீ.டி.வி.கெமரா உதவியுடன் அடையாளப்படுத்தப்பட்ட மேலும் சில சந்தேக நபர்கள் தேடப்பட்டு வருவதாக விசாரணைகளை நடத்தி வரும் பொலிஸார் தெரிவித்தனர்.



புகையிலை மற்றும் புகைத்தல் ஒழிப்பு தினத்தையொட்டி விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்று லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி துரைராஜ் ரெய்ஸினி புகையிலை மற்றும் புகைத்தல் பாவனையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக பூரண விளக்கம் அளித்தார். இந்நிகழ்வில் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி துரைராஜ் ரெய்ஸினி மற்றும் பொது சுகாதார அதிகாரிகள் கலந்துக்கொண்டனர். (படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# தமிழக அரசின் நிவாரணப்பொதிகள் வழங்கி வைப்பு



ஹற்றன் சுழற்சி நிருபர்)

தலவாக்கலை ஹொலிரூட் தோட்டத்திலுள்ள மூன்று பிரிவுகளில் வசிக்கும் 692 குடும்பங்களுக்கு தோட்டத்தில் உள்ள பொது கட்டடத் தொகுதியில் வைத்து தமிழக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அரிசி 10 கிலோ கொண்ட பொதி மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.



தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி அதிகரிப்பு, எரிவாயு தட்டுப்பாடு போன்றவற்றால் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு தமிழக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 10 கிலோ அரிசி மிகவும் உதவி எனவும் இலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் எவ்வித உதவியும் செய்யாத நிலையில் தமிழக அரசாங்கம் தமக்கு செய்தது பெரிய உதவி என நிவாரண உதவிகளை பெற்றுக்கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

# மண்ணெண்ணெய்க்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பு

## கட்டுப்பாடுகளுடன் விநியோகம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)





தலவாக்கலையிலுள்ள எரிபொருள் நிலையத்திற்கு 6, 500 லீற்றர் மண்ணெண்ணெய் கொண்டுவரப்பட்டது. இதனைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாலை முதல் 1800ற்கும் மேற்பட்ட மக்கள் நீண்ட வரிசையில் பசி பட்டினியுடன் காத்திருந்தனர்.

சிலர் வீதிகளில் அமர்ந்து இருந்ததோடு, சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், முதியோர்கள், நோயாளர்கள் என பலரும் காத்திருந்தனர். அனைவருக்கும் டோக்கன் வழங்கப்பட்டது. ஒருவருக்கு 250 ரூபாய்க்கு மாத்திரமே மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டது. வெயிலுக்கு மத்தியிலும் பசி பட்டினியுடன் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்ததை எம்மால் அறிய முடிந்தது.

வரிசையில் காத்திருந்த மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

குடும்பத்தினருக்கு சாப்பாடு கொடுக்க முடியாமல் பட்டினியாக கிடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஆதங்கத்துடன் தங்களின் குரலை வெளிப்படுத்தினர். மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்க்க முன்வர வேண்டும். வரிசையாக காத்திருந்தாலும் இரண்டு லீற்றர் மாத்திரமே மண்ணெண்ணெய் வழங்குகின்றார்கள். இதற்கு நாள் முழுவதும் காத்திருக்க வேண்டிய சூழல் இருப்பதாக இவர்கள் கவலைகளை வெளிப்படுத்தினர்.

## சிசுவின் சடலம் மீட்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகசேனை சிங்கள வித்தியாலயத்துக்கு அருகிலிருந்து நாகசேனை வலகா தோட்டத்திற்கு செல்லும் வீதியின் ஓரத்தில் நேற்று சிசுவின் சடலம் ஒன்று லிந்துலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

அப்பகுதியில் சென்ற சிலர் சிசுவின் சடலத்தை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து லிந்துலை பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய தகவலையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தினை மீட்டுள்ளனர். சிசு யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சுமார் 6 மாத காலம் நிறைவடைந்த சிசுவொன்றின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட நீதவானின் விசாரணைகளின் பின் பிரேத பரிசோதனைக்காக சிசுவின் சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெருந்தோட்ட மக்களின் காணி விவகாரத்தில் காத்திரமான கொள்கைத் தீர்மானம் அவசியம்

## முன்னாள் எம்.பி மயில்வாகனம் திலகராஜ்



பெருந்தோட்ட மக்களின் காணி விவகாரம் குறித்தும் காத்திரமான கொள்கைத் தீர்மானமொன்று அவசியம் என முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரும் சபை முதல்வருமான தினேஷ் குணவர்தனவை அண்மையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள சபை முதல்வர் அலுவலகத்தில் மலையக அரசியல் அரங்கப்பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடிள்ளனர்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் உணவு நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் பெருந்தோட்டப்பகுதிகளில் பயிரிடப்படாத நிலங்களில் உணவு உற்பத்திகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்ற ஜனாதிபதி கோட்டபாயவின் ஆலோசனையை நாம் வரவேற்கின்றோம். அதேநேரம் இப்படியான நெருக்கடியான நேரங்களில் மாத்திரம் பெருந்தோட்டப்பகுதியில் பயிரிடப்படப்படாத காணிகளில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் தற்காலிக தீர்மானமாக இது அமைதல் கூடாது. 1972 1977 பஞ்ச காலப்பகுதிகளில் இவ்வாறான ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆங்காங்கே மக்கள் மரவள்ளிச் செய்கையில் ஈடுபட்ட வரலாறுகள் மலையகத்தில் உண்டு. ஆனாலும் அந்த காணிகள் மக்களுக்கு நிரந்தரமாக்கப்படவோ மாற்றுவாழ்வாதார வழிகளோ நிரந்தரமாகச் செய்யப்படவில்லை. மாறாக அரச காணிகள் மீண்டும் 1992இல் தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டு மக்கள் தொழிலாளர்களாகவே வைக்கப்பட்டுள்ளனர். மலையகப் பெருந்தோட்ட மக்களின் காணி உரிமை குறித்து நீண்டகாலமாக பேசப்பட்டுவருகின்றது. தென், சப்ரகமுவ மாகாணங்களைப் போன்று மலையகத்திலும் சிறுதோட்ட உரிமையாளர் முறைமை அறிமுகம் செய்யப்படுதல் வேண்டும் எனும் கோரிக்கையை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

இப்போதைய அறிவிப்பினைத் தொடர்ந்து மலையகப் பகுதிகளில் இளைஞர்கள் இத்திட்டத்துக்கு தயாராகிவிட்டனர். சில தோட்டப்பகுதிகளில் பயிரிடப்படாத நிலங்களை தோட்டப்பகுதி இளைஞர்கள் அடையாளம் கண்டும் உள்ளனர்.

மஸ்கெலியா சாமிமலைப் பகுதிகளில் இவ்வாறு காணிகளை அடையாளம் கண்டு எல்லைப்படுத்திய இளைஞர்கள் தோட்ட முகாமைத்துவத்துக்கு முறையான எழுத்துமூலமான வேண்டுகோளை விடுத்துள்ளனர். ஆனாலும் அவர்களுக்கு உரிய அனுமதிகள் வழங்கப்படுவதற்கு மாறாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கிறது.

## கைக்குண்டு மீட்பு

நுவரெலியா தினகரன் நிருபர்

நுவரெலியா பொலிஸாரினால் கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் (09.06.2022) கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

நுவரெலியா ஹாவாஎலி பகுதியில் அமைந்துள்ள நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான வாவியில் (பெரேக் லேன் ஆவேலியா) இருந்து டி 82 ரக கிரேனைட் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா ஆவேலியா பகுதியில் வசிக்கின்ற தொழிலாளியொருவர் வழங்கிய தகவலொன்றின் அடிப்படையில் வாவிக்கு சென்று சோதனை மேற்கொண்ட பொழுதே கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

அதனை நுவரெலியா பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் இதுதொடர்பான அறிக்கையொன்றை நுவரெலியா நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிமன்ற உத்தரவின் பின்னர் கைக்குண்டை அழிப்பதா? அல்லது வேறு தரப்பினரிடம் கையளிப்பதா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



கண்டி கலஹா அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவ திருவிழா கடந்த 2ஆம் திகதி வியாழக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமானது. நேற்று காலை கலஹா தெல்தோட்டை அம்மன் ஆலயத்தில் இருந்து பாற்குட பவனி எடுத்து பக்தி அடியார்கள் கலஹா ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு எடுத்து வரப்பட்டது. இதில் அதிகமான பக்த அடியார்கள் கலந்து கொண்டு வழிப்பாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

# உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய ஐந்து விவசாயப் பண்ணைகள்

(எம்.ஏ.அமீனுல்லா )

கண்டி மாவட்டத்தில் பூஜாபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் எதிர்கால உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஐந்து விவசாயப் பண்ணைகளை நிறுவுவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்பகுதியிலுள்ள கோவில்கள் மற்றும் தனியாருக்கு சொந்தமான நிலங்களில் இவ்வாறு விவசாயம் செய்யப்படுகிறது. பூஜாபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் வல்பொலபிட்டிய, உடமுதுன, பஹல ஹிங்குல்வல, உடஹிங்குல்வல மற்றும் பல்லேகம பஹல ஆகிய கிராமங்களில் இக்கூட்டுப் பண்ணைகள் செயற்படுகின்றன. நிலங்களில் முன்னெடுக்கப்படும் இவ்வாறான குறுகிய கால உணவுப் பயிர்கள் நில உரிமையாளர்களுக்கோ அல்லது அப்பகுதியில் வசிப்பவரும் பொதுமக்களுக்கோ எவ்வித இடையூறுகளும் இல்லாதவாறு முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பூஜாபிட்டிய பிரதேச செயலாளர் வத்சலா மாரம்பே தெரிவித்தார்.

காணி உரிமையாளர் மட்டுமன்றி ஏனையவர்களும் காணியில் தொழிலாளர்களின் உதவியுடன் விவசாயம் செய்து அறுவடையை தடையின்றி மேற்கொள்ள முடியும் எனவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்காக அதிகளவான விவசாயம் செய்யப்படாத நிலங்கள் பயன்படுத்தப்படவிருப்பத்துடன் மூன்று மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய உணவுப் பயிர்கள் இத்திட்டத்தின் கீழ் பயிரிடப்படுகின்றன எனவும் அரசு அதிகாரிகளின் பங்களிப்புடன் முன்மாதிரி திட்டமாக இது செயற்படுத்தப்படுகிறதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ் விவசாய பண்ணைகளை பார்வையிடுவதற்காக கண்டி மாவட்ட செயலாளர் .சந்தன தென்னகோன், பூஜாபிட்டிய பிரதேச செயலாளர் வத்சலா மாரம்பே, கண்டி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ரம்யா விஜேசுந்தர ஆகியோர் நேற்று கள விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

# கிழக்கின் குரல்

## புணாணை கிழக்கில் காட்டு யானைகள் அட்டகாசம்

கல்குடா தினகரன் நிருபர்





வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் புணாணை கிழக்கு கிராம அதிகாரி பிரிவிலுள்ள கேணிமடு பகுதியில் காட்டு யானைகள் புகுந்து பெறுமதியான தென்னை மரங்களை அழித்துள்ளன.

கேணிமடு பகுதியில் தோட்டம் வைத்து பராமரித்து வரும் சி.முகம்மட்சாலி (வயது 64) என்பவரது தோட்டத்திலுள்ள ஐம்பத்தி மூன்று (53) தென்னை மரங்களை காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளது.



இப்பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதுடன், காய்த்த தென்னை மரங்கள் மற்றும் காய்க்கும் தருவாயில் உள்ள தென்னை மரங்கள், வளர்ந்து வரும் தென்னை மரங்கள் என்பவற்றினை பகுதியளவிலும், முற்றாகவும் சேதமாக்கியுள்ளதாக பாதிக்கப்பட்ட சி.முகம்மட்சாலி தெரிவித்தார்.

சுற்றுவேலியை சேதமாக்கி இரவு வேளையில் யானைகள் வருகை தந்து சேதப்படுத்தியுள்ளதுடன், நான் சற்று தூக்கத்தில் இருந்ததால் எனக்கு தெரியவில்லை. தொடர்ச்சியாக வருகை தருவதால் உயிர் அச்சுறுத்தலுடன் வாழ்ந்து வருவதுடன், பாரிய நஷ்டங்களையும் எதிர்கொண்டுள்ளேன்.

இப்பிரதேசத்திற்குள் நுழையும் காட்டு யானைகளை கட்டுப்படுத்த நிரந்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் தொடர்ச்சியாக இவ்வாறான அழிவுகளைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

எனவே இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நிரந்தரத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் யானை வேலியை முறையாக பராமரித்து எங்களது உயிர்களையும், பயிர்களையும் பாதுகாக்க உதவ வேண்டுமென சி.முகம்மட்சாலி வேண்டுகோள் விடுத்தார்.

## பொத்துவிலில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் மூலிகைத் தோட்டம்

கிழக்கு ஆளுநர் நடவடிக்கை



நிந்தவூர் குறூப் நிருபர்

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேசத்தில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் மூலிகைத் தோட்டம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை தான் எடுப்பதாக,கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (09) மாலை நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலைக்கு சினேகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் இங்கு கருத்து தெரிவித்த ஆளுநர் ;

கல்முனை பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், இந்த மூலிகைத் தோட்டம் உருவாக்குவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம். அத்துடன் ஆயுர்வேத மருந்து உற்பத்திக்காக வெளிநாடுகளிலிருந்து பல்வேறு வகையான மூலிகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆனால், இவ்வாறு தோட்டங்களை அமைத்து மூலிகைகளை நாம் உற்பத்தி செய்தால் இறக்குமதி செலவுக்கான செலவீனங்களை குறைத்து, அந்நியச் செலாவணியை நாம் மீதப்படுத்த முடியும்.

எனவே பொத்துவில் பிரதேசத்தில் இந்த தோட்டத்தினை அமைப்பதற்காக விவசாயிகளுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து, அவர்கள் மூலம் இதனை உற்பத்தி செய்வதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

## போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் மட்டக்களப்பு கிளை இடமாற்றம்

கல்லடி குறூப் நிருபர்

போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் மட்டக்களப்பு கிளை தற்போது மட்டக்களப்பு நகர் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவக பொறுப்பதிகாரி தர்மலிங்கம் ஹரிதேவா தெரிவித்துள்ளார்.

கடந்த 6 வருட காலமாக மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் கல்லடி பகுதியில் சாரதிகளுக்கான மருத்துவ சான்றிதழ்களை வழங்கும் சேவையினை வழங்கி வந்த தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் தற்போது மட்டக்களப்பு பார் வீதியில் திறந்த பல்கலைக்கழகத்திற்கு முன்னால் அதிநவீன வசதியுடனான கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த கட்டடத்தில் சாரதி மருத்துவ சான்றிதழ் வழங்கும் சேவையினை பொது மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவக பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் மருத்துவ சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் சாரதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இலகுபடுத்தும் வகையிலும், இடப்பற்றாக்குறை காரணமாக ஏற்படுகின்ற அசௌகரியங்களை குறைக்கும் வகையிலும் குறித்த இடமாற்றம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. மாவட்டத்தில் தொடரும் பெற்றோல் வரிசை



மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்தும் பெற்றோலுக்கான வரிசை அதிகரித்தே வருகின்றது. பல மணிநேரம் நீண்ட கியூவில் காத்துக்கிடந்தே பெற்றோலைப் பெற வேண்டியுள்ளது.

மட்டக்களப்பு கல்முனை நெடுஞ்சாலையில் ஆரையம்பதி பிரதான வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொதுமக்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டது.

நீண்ட வரிசையில் நின்று மக்கள் பெற்றோலைப் பெற்றுக்கொண்டனர்.ஒருவருக்கு 500 ரூபாய்க்கே பெற்றோல் வழங்கப்பட்டது.

## அம்பாறை மாவட்ட அமைப்பாளராக வினோகாந்த்

காரைதீவு குறூப் நிருபர்



ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளராக வெள்ளையன் வினோகாந்த் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாச நியமனக் கடிதத்தை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வு கொழும்பு எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது. இதேவேளை அமைப்பாளர் வி.வினோகாந்த் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசத்துக்கான இணைப்பாளராக பணியாற்றி வருகிறார்.

## குமுக்கன் காளியம்பாளுக்கு வைகாசிப் பொங்கல்

காரைதீவு குறூப் நிருபர்



கிழக்கு மாகாணத்தின் தென் கோடியில் உள்ள குமுக்கன் காளியம்மனுக்கு நேற்று முதல் முறையாக வைகாசி பொங்கல் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

சித்தர்களின் குரல் சமஸ்தானத்தின் தலைவர் ஶ்ரீ சங்கர்ஜி தலைமையிலான குழுவினர் குமுக்கன் காளிகாதேவி ஆலயத்திற்கு சென்று அங்கு அபிஷேகங்கள் செய்து வேப்பிலை அலங்கரித்து, பொங்கல் பொங்கி வழிபட்டார்கள்.

நாட்டிலே இயல்பு நிலை திரும்ப வேண்டும், மக்கள் சந்தோஷமாக வாழவேண்டும் என்ற ரீதியிலே இந்த சிறப்பு வைகாசி பொங்கல் விழா நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

சித்தர்கள் குரல் சமஸ்தானத்தின் காவல் தெய்வமாக விளங்கும் காளிகாம்பாள் விக்ரகசிலை அண்மையில் சித்தர் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ குழுவினரால் பிரதிஷ்டை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆலய உற்சவ காலங்களில் தங்க நகைகளை தவிர்க்கவும்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

கிழக்கில் தற்போது பத்தினி தெய்வ வழிபாடான கண்ணகியம்மன் ஆலய உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா தொற்று பரவல் காரணமாக ஆலய உற்சவங்கள் எதுவும் நடைபெறாதிருந்தன.

இந்நிலையில் இவ் வருடம் இங்குள்ள அனைத்து ஆலயங்களிலும் வருடாந்த திருச்சடங்கு உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. வைகாசி பூரணையை மையப்படுத்தியதாக கண்ணகி அம்மன் திருச்சடங்கு குளிர்த்தி வைபவம் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதனையிட்டு பல கண்ணகி அம்மன் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள், பக்தர்களினால் காவடி, அலகு குத்துதல், தீச்சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சணை செய்தல் போன்ற நேர்த்திக்கடன் செலுத்தும் நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெறுகின்றன.

இதனையிட்டு பெருமளவிலான பக்தர்கள் ஆலயங்களுக்கு படையெடுத்து வருகின்றனர்.

ஆலயங்களில் பக்தர்கள் அதிகம் கூடும் இடங்களில் திருடர்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளதுடன் சில பெண்களின் தங்க நகைகளும் ஆபகரிக்கப்பட்டு வருகின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு ஆலய உற்சவங்களுக்கு வருகை தரும் பெண்கள் தங்க நகைகளை அணிந்து வருவதை தவிர்க்குமாறும் தங்களது பாதுகாப்பை தாங்களே பாதுகாத்துக் கொள்ளுமாறும் ஆலயங்களின் நிர்வாக சபையினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நாவிதன்வெளி சமுர்த்தி வங்கியில் ஒன்லைன் துரித சேவை ஆரம்பம்

பெரியநீலாவணை விசேட நிருபர்

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நாவிதன்வெளி சமுர்த்தி வங்கியில் பொதுமக்களுக்கான ஒன்லைன் துரித சேவைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு (8) வங்கி முகாமையாளர் சட்டத்தரணி எம். எம். முபீன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன், சமுர்த்தி திணைக்களத்தின் அம்பாரை மாவட்ட பணிப்பாளர் எம்.எஸ். எம்.சப்ராஸ் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு ஒன்லைன் சேவை ஊடாக பொது மக்களுக்கான வங்கி கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பித்து வைத்தனர்.

பொதுமக்கள் தமது துரிதமான சேவையை பெற்றுக் கொள்ளும் நோக்கோடு நாட்டிலுள்ள சமுர்த்தி வங்கிகளில் ஒன்லைன் இணையவழி ஊடாக துரித சேவையை பெற்றுக் கொள்ளும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது வங்கிகளில் இச்சேவையை வழங்கப்பட்டு வருகின்றன. நாவிதன்வெளி சமுர்த்தி வங்கியில் இந்த வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அடுத்து சமுர்த்தி பயனாளிகள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் எஸ். சிவம், முகாமையாளர் ஏ. சித்தி நஜீமா, திட்ட முகாமையாளர் எம். தமிழ்வாணன், மேற்பார்வை உத்தியோகத்தர்களான ரீ. தெய்வேந்திரன், ஐ.எம். ஹனிபா, எம். நாசர், சமுர்த்தி மகா சங்க தலைவர் கே. பிரசன்னா, உட்பட பிரதேச மட்ட சமுர்த்தி சங்கங்களின் தலைவர்கள், வங்கி உத்தியோகத்தர்கள் என பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## காணி ஆவணங்கள் 100 பேருக்கு வழங்கி வைப்பு

தோப்பூர் தினகரன் நிருபர்



திருகோணமலை மாவட்ட மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் அரச காணிகளில் வதியும் மற்றும் அரச காணிகளில் பயிர்செய்கை மேற்கொண்டு உரிய காணிகளை பராமரிக்கும் 100 பேருக்கான காணி ஆவணங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுகளில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட. அரசாங்க அதிபர் பீ.எச்.என்.ஜயவிக்ரம கலந்து கொண்டு காணி ஆவணங்களை கையளித்தார்.

இந் நிகழ்வுகளில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன். மூதூர் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் பி.அறபாத், கணக்காளர் நாளீர், உதவிப், பிரதேச செயலாளர் எஸ்.நிருபா,காணி உத்தியோகத்தர்களான எஸ்.வை.அறபாத் ஆகியோர் கந்து கொண்டனர்.

பாலத்தோப்பூர், ஆலிம் நகர், கூனித்தீவு மற்றும் ஜின்னா நகர் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கே இக் காணி ஆவணங்கள் கையளிக்கப்பட்டன

நாடு எதிர் கொண்டுள்ள இவ் சிக்கலான நிலையில் இங்கு வழங்கப்படும் காணி அனுமதிப்பத்திரங்களுக்குரிய காணிகளில் வீட்டுத்தோட்ட பயிர் செய்கையை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்தார்

ஆவணங்களை பெற்றுக்கொண்ட மக்கள் மகிழ்ச்சியுடன் சென்றனர்.

# நகர்வலம்



# அநுராதபுர செயலக ஏற்பாட்டில் வீட்டுத் தோட்ட உற்பத்தி திட்டம்

( திறப்பனை தினகரன் நிருபர் )

வீட்டுத் தோட்ட மைதான மாதிரி நிகழ்ச்சியொன்று அநுராதபுர மாவட்ட செயலக பிரதான மண்டபத்தில் கடந்த 07 ம் திகதி மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர, மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எச்.எல். தேனுவர ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட விவசாயப் பணிப்பாளரும் மாகாணங்களுக்கு இடையிலான விவசாயத் திணைக்களத்தின் பாட உத்தியோகத்தருமான ஏ.எம்.எம்.நளீரினால் இதன் போது இந்த விளக்கம் இங்கு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்து மாவட்ட செயலாளர் குறிப்பிடும்போது, அன்றாட எமது தேவைகளுடன் சேர்த்து வீட்டுத்தோட்டம் உண்டாக்குவது மற்றும் முன்மாதிரியான சாகுபடியை ஏற்படுத்துவது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சியை நடத்துவது குறித்து மாவட்ட அலுவலர்கள் முன்வைத்த யோசனையின் பேரில் மாவட்ட விவசாய பணிப்பாளரினால் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எதிர்காலத்தில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு ஏற்படக் கூடும் எனவும், இந்த நிலையில் வீட்டுத்தோட்டம் எவ்வகையிலும் மேற் கொள்ளப்படாவிடின் நெருக்கடி மேலும் அதிகரிக்கும் எனவும் மாவட்டச் செயலாளர் இதன் போது தெரிவித்தார். நாட்டின் பொருளாதாரம் முன்னெப்போதும் இல்லாத வகையில் வீழ்ச்சியடைந்து வருவதாகவும், நெருக்கடியான காலத்தில் அரசாங்க அதிகாரிகள் சொற்ப சம்பளத்தில் வாழ்க்கையை நடத்துவது கடினம் எனவும், இது குறிப்பாக குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்ய உதவும் எனவும் தெரிவித்தார்.



எதிர்காலத்தில் உலக உணவு நெருக்கடியில் எமது நாடு முன்னணியில் இருக்கும் என மாவட்ட விவசாயப் பணிப்பாளர் இதன் போது தெரிவித்தார். அநுராதபுர மாவட்டத்தில் நாட்டின் மொத்த நெல் அறுவடையில் 12% , 80% சோயா மற்றும் 25% கௌபி மற்றும் 50% எள் விளைச்சலையும் கொண்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பிற்கு வீட்டுத்தோட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்கிய அவர், தோட்டத்தை மற்றும் அலுவலகத்தை முன்மாதிரி சூழலாக மாற்ற அனைவரும் ஆர்வம் காட்ட வேண்டும் என்றார். பாடசாலை மாணவர்களின் போசாக்கு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் வீட்டுத்தோட்ட வேலைத் திட்டம் சாதகமான பலன்களை கொண்டு வரும் எனவும் பணிப்பாளர் மேலும் விளக்கினார்.

சோளச் செய்கை குறைவடைந்த நிலையில் காணப்படுவதனால் கோழி மற்றும் முட்டையின் விலைகள் அதிகரித்துள்ளதாகவும், வீட்டில் உற்பத்தி செய்யப்படும் தம்பள, சோயா மற்றும் முட்டைகளை விட உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளில் புரதச்சத்து கிடைக்கும் எனவும் போஷாக்கு தரவுகளின் மூலம் திருமதி தேனுவர சுட்டிக்காட்டினார். மாகாணங்களுக்கிடையிலான விவசாயத் திணைக்களத்தின் பாட உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.நளீர் வீட்டுத்தோட்டத்தை எவ்வாறு வடிவமைப்பது மற்றும் அனைத்து கழிவுகளையும் வீட்டுத்தோட்டத்தில் எவ்வாறு திறம்பட பயன்படுத்துவது என்பது குறித்தும் இங்கு விளக்கினார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில்

# டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(நிந்தவூர் குறூப் நிருபர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கடந்த 2017/18 ஆம் ஆண்டிற்கான இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, நாளை ஞாயிற்றுக்கிழமை 12ஆம் திகதி காலை 09.00 மணிக்கு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த பயிற்சிநெறியானது, ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் மற்றும் கொரோனா நோய்த் தொற்று காரணமாக சில வருடங்கள் காலதாமதமானதுடன், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடந்த வருடம் இதற்கான இறுதிப் பரீட்சை இடம்பெற்றிருந்தது. இதில் 41 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், அந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வே இவ்வாறு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வினை நடாத்துவதன் நோக்கமானது, எமது பல்கலைக்கழகத்தில் கற்று சிறந்த ஊடகக் கலாச்சாரம் ஒன்றினை உருவாக்க முன்வந்துள்ள இம் மாணவர்களின் திறமையைப் பெரிதும் பாராட்டுவதுடன், ஒரு ஒழுக்கமான ஊடக கலாச்சாரம் ஒன்றினை இந்நாட்டிலும், வெளிநாட்டிலும் தோற்றுவிப்பதற்கு இவ்வாறான பயிற்சி நெறிகள் மிகவும் பெறுமதியானதாகும்.

எனவே, இவ்வாறான பயிற்சி நெறிகளை இனி வரும் காலங்களில் எமது பல்கலைக் கழகத்தில் தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்கு தான் திட்டமிட்டுள்ளதாகவும், பயிற்சி நெறியின் பின்னர், நாட்டிலும் சர்வதேசத்திலும் ஊடக தர்மத்தினைப் பேணக்கூடிய நல்ல ஊடகவியலாளர்கள் உருவாக வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திற்காகவுமே இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதேவேளை இந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தகைசார் விரிவுரையாளரும், பேராசிரியருமான கலாநிதி ஏ. சண்முகதாஸ் கலந்து கொண்டு பிரதான உரை நிகழ்த்தவுள்ளதுடன், பல்கலைக்கழகத்தின் மொழித்துறைத் தலைவரும், இப்பயிற்சி நெறியின் இணைப்பாளருமான பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் தலைமைப் பேராசிரியரும், வெளிவாரி கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளருமான பேராசிரியர் எம்.எச் தௌபீக் உள்ளிட்ட இப்பயிற்சி நெறியின் அனைத்து வளவாளர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக உபவேந்தர் மேலும் தெரிவித்தார்.





இலங்கைக்கான குவைத்தின் முன்னாள் தூதுவர் அபுல்லா நாசர் மொஹமட் அல் சனூசி அண்மையில் காலமானார். நான் முன்னாள் தூதுவராக இருந்த காலத்தில் அவருடன் நெருக்கமாக பழகினேன். 2004 சுனாமியில் இருந்து இலங்கை மீண்டு வருவதற்கு உதவிய மகத்தான மனிதாபிமான சேவைகளுக்காக அவர் நீண்ட காலமாக நினைவுகூரப்படுவார். கொழும்பில் உள்ள குவைத் தூதரகத்தில் அவரது குடும்பத்தாருக்கு எனது இரங்கலை தெரிவித்தேன் என பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார்.



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன்(ஜனா), கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரது அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.



புதிய காணி அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோவை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் அவரது அமைச்சில் சந்தித்து மட்டக்களப்பு மாவட்ட அரச காணிகள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடினார்.

# லண்டன் மலையக இலக்கிய மாநாட்டில் கலைஞர் மாத்தளை கார்த்திகேசுவுக்கும் கவிஞர் பொன் பூபாலனுக்கும் அஞ்சலி

மாத்தளையில் பிறந்து 1960 முதல் நாடகம், கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், நூல் வெளியிடுகள் என்று மலையக இலக்கியத்தில் ஆழமான தடங்களைப் பதித்த மாத்தளை கார்த்திகேசுவுக்கும் மாத்தளை பலாபத்பல நோனா தோட்டத்தில் பிறந்து ஆசிரியராக, அதிபராக, கல்விப்பணிப்பாளராக பணியாற்றி, மலையக மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் கலை இலக்கியத்துறைக்கும் 1960 முதல் பெரும் பணியாற்றி, 'இதயமுள்ள பாரதி', 'கவிதை அரங்கேறும் கோலம்' ஆகிய கவிதை நூல்களை ஆக்கி, மலையக கவிதை இலக்கியத்திற்கு வளம் சேர்த்த மலையக கவிஞர் பொன் பூபாலனுக்கும் லண்டன் மலையக இலக்கிய மாநாட்டில் இன்று அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

இதேவேளை மாத்தளை அறங்காவலர்களான விக்னேஸ்வரா சர்வானந்தா, சண்முகம் சந்திரசேகரன் இருவரும் மாநாடு வெற்றிபெற வாழ்த்து தெரிவித்துள்ளனர்.









பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத கட்சிகளின் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலிதே ரங்கா பண்டாரவை கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் சந்தித்து நாட்டின் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தமது ஆலோசனைகளை முன் வைத்தனர். இச்சந்திப்பில் விஷ்ணுகாந்தன், ஜகத் கருணாசேன, இந்திக்க சூரியாராச்சி மற்றும் ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவர் முபாறக் மஜீத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இலங்கையை போன்ற பொருளாதார வீழ்ச்சியை பாகிஸ்தான் அடையும்

## பொருளாதார கணிப்புகள் ஆரூடம்

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு சமனான வீழ்ச்சியை பாகிஸ்தான் எதிர்கொண்டிருப்பதாகவும் அதன் அந்நிய செலாவணி கையிருப்பு வேகமாகக் கரைந்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போதைய நிலை நீடிக்குமானால் இலங்கையின் நிலையையே பாகிஸ்தானும் விரைவில் அடையும் என பாகிஸ்தான் பொருளாதார வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.



அந் நாட்டின் வருமானத்துக்கும் செலவுக்கும் இடையிலான இடைவெளி தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாகவும் உணவு மற்றும் எரிசக்திக்கான இறக்குமதி செலவு உலகளாவிய ரீதியாக அதிகரித்து வருவதால் இவற்றை இறக்குமதி செய்வதில் பெருமளவு அந்நிய செலாவணி இருப்பை செலவிட வேண்டியிருப்பதாகவும் இறுதியில் இந்தப் பொருளாதாரச் சூழல் பாகிஸ்தான் பொருளாதாரத்தை பெருமளவில் வீழ்த்தும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

2021 22 காலப்பகுதியின் முதல் பத்து மாதங்களுக்கான எரிபொருள் இறக்குமதி 17 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் பாகிஸ்தான் 8.7 பில்லியன் டொலர்களையே செலவிட்டிருந்தது. 2020 2021 காலப் பகுதியில் 24 பில்லியன் டொலர்களாக காணப்பட்ட ஏற்றுமதி இறக்குமதிக்கு இடையிலான துண்டுவிழும் தொகை 21 22 காலப் பகுதியில் 39 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் எல்லை தாண்டி தாக்குதல்

## பாதுகாப்பு சபையில் ஆப்கானிஸ்தான் புகார்



ஆப்கானிஸ்தான் எல்லையைத் தாண்டி பாகிஸ்தான் விமானப்படை நடத்திய வான் தாக்குதலை ஆப்கான் அரசு கண்டித்துள்ளதோடு ஐக்கிய நாடுகள் சபைக்கும் அறிவித்துள்ளது. ஐ.நா. சபை ஆப்கானிஸ்தானை உறுப்பு நாடாக அங்கீகரிக்காவிட்டாலும் அந்நாட்டுக்கான நிரந்தர பிரதிநிதியாக ஆப்கான் அரசினால் அங்கீகாரம் பெற்ற நஸீர் அஹமட் பாயிக் பாதுகாப்பு சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் பாகிஸ்தான் நடத்தியுள்ள விமானத் தாக்குதலை ஆட்புல ஒருமைப்பாட்டின் மீதான ஆக்கிரமிப்பாக வர்ணித்துள்ளார்.

ஆப்கானிய பயங்கரவாதிகள் எல்லைதாண்டி பாகிஸ்தானுக்குள் உடுருவுவதாகவும், எல்லைக் காவல் படையினரைத் தாக்குவதாகவும் கூறியிருக்கும் பாகிஸ்தான் இராணுவம் அதை மட்டுப்படுத்தும் வகையிலேயே இத்தாக்குதலை மேற்கொண்டதாக காரணம் தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் தலிபான் அல்லது தெஹ்ரீக் ஈ தலிபான் பாகிஸ்தான் என அறியப்படும் அமைப்புக்கு எதிராகவே தாக்குதல் நடத்தப்பட்டதாக பாகிஸ்தான் கூறியுள்ளது. ஆனால் இத் தாக்குதலில் 45 பேர் மரணமடைந்ததாகவும் இத்தொகையில் 20 பேர் சிறுவர் சிறுமியர் என்றும் தெரிவித்திருக்கும் ஆப்கான் அரசு, கோஸ்ட் மாகாண தாக்குதலில் 12 சிறுமியரும் மூன்று சிறுவர்களும் அடங்குவர் என்றும் குனார் மாகாண தாக்குதலில் மூன்று பெண்களும் இரண்டு சிறுவர்களும் அடங்குவதாகவும் தகவல் வெளியிட்டுள்ளது.

ஒரு நாடு அது யாரால் ஆளப்படுகின்ற நாடானாலும் அதன் எல்லையைத் தாண்டி மற்றொரு நாடு தாக்குதல் நடத்துமானால் அது சர்வதேச சட்டங்களை மீறும் செயல் என்று ஆப்கானிய அரசு தன் நிலைப்பாட்டை அறிவித்திருக்கிறது.

# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்



## ஒன்றிணைவோம்

விலை சூத்திரமின்மை
விண்ணைமுட்டும் அளவு
விலவாசியுயர்வு
சூரியன் புலர்ந்தாலும்
மாலை மறைந்தாலும்
கியூ மறையவில்லை
ஏனிந்த நிலையோ
நாட்டில்
தெரியவில்லை!

சந்தைக்குப் போனாலும்
சக்திக்கு மேலப்பா விலை
தக்காளி விலைகேட்டால்
தலையும் சுற்றுதடா
மீன் வாங்க முடியவில்லை
கீரிச்சூடைக்கும்
விலைதானப்பா

சோப்புக்கும் தட்டுப்பாடு
அன்றாட தொழிலாளர் நிலையோ
வருமானக்குறைபாடு
அடுப்படியும் எரியுதில்லை
இனியும் தொடருமா இந்நிலை

அங்கரும் இல்லை அன்றாட
உணவான பாணுமில்லை
அடிக்கடி விலைஉயர்வு
ஆட்டிப்படைக்குது நம்வாழ்வு
ஆண்டவனே நீர் தாரும்
இதற்குத் தீர்வு

அரச ஊழியர் நிலையோ
பரிதாபம்
அரசுதருமா சம்பளவுயர்வு
கொரோனா கொடுத்த
கொடுங்கோல் நகர்வு
கடுமையாய் பாதித்தது
நம் இலங்கை!

அரசின் பொருளாதாரக்
கொள்கை
அதாள பாதத்தில் செல்லுது
மூன்று நேர உணவுண்ண
முடிவுகாணவேண்டும் இனி
தப்பெண்ண!
மக்கள் வாழ்வு சிறப்புற
மதியை வென்று ஒன்றிணைவோம்

**தோப்பூர் எஸ் சிராஜ்தீன்**
நற்பிட்டிமுனை

## ஆயிஷா



கண் மணியே
வெண் பனிச் சரமே
வெள்ளை இறால் குஞ்சே
கொள்ளை அழகொழுகும்
வர்ணமிகு வானவில்லே

என் செல்லமே சித்திரமே
பசுந் தளிரே
முத்து மணிச் சுடரே
சுடரேந்தி கும்மிருட்டை
வாசித்துப் பறந்த மின் மினியே

யானையின் தந்தமென
நீல நதியில் நீந்துலாவிய
இரண்டாம் பிறை நிவவே

குட்டி தேவதையே
பிரகாசமாய் கண் சிமிட்டி ஒளிர்ந்த
ஒற்றை விண் மீனல்லவா நீ

நின்னை எதற்காக
கொலை புரிந்தார்கள்
கயவர்களென அறியேன் காண்

ஆயினும் நெஞ்சு பொறுக்குதில்லை
நின் மூச்சறுத்து
சேற்றினில் புதைத்து விட்ட
வஞ்சகனை நினைத்து
அதனாலுனை பாடுகிறேன்
என் கண்ணீரை காய்ச்சுகிறேன்

புறாவின் மனதையும்
ரோஜா மலரின்
மென்மையிலும் மென்மை மிகு
நின்னை பாட
என் சொற்கள் தடுமாறுது பூச்சரமே

இருந்தும் பச்சா தாபங்களின்றி
படு பாதகம் புரிந்து விட்டு
கடவாயிலிருந்து வீணி வடிய வடிய
வேடிக்கை பார்த்து நிற்கும்
வேட்டை நாய்களின்
சிரம் மண்ணில் உருள
என் சொல் வாளாயும் தீயாயும்
நீளுமென் சிட்டுக் குருவியே பார்

எதற்காக உயிர் பிரிந்தோமென்று
கடைசிவரை அறியாமல்
அமைதியாக உறங்கும்
நறுமண மிகு மல்லிகை செண்டே

அன்பு மகளே ஆயிஷா
நின் மரணம் என்னில் எதைத்தான்
விதைத்துச் சென்றிருக்கும்
ஒரு இரங்கற் பாவை வடித்து முடிக்கும்
இம் மன நிலையை தவிர

**ஜமீல்**



## கேள்விக்குறி ஆகிவிட்ட பெண்கள் பாதுகாப்பு ...!!!

கருவறை முதல் கல்லறை வரை...
இன்றிலிருந்து அன்று வரை..!!!
பெண்களை வார்த்தைகளால்
பேசிய கொல்கின்றார்கள்...
பெண்களுக்கு மட்டுமேன் இப்படி
வரைமுறையற்ற செயல்கள் நடக்கின்றன....
ஙளப்போது மாறும் இந்த வார்த்தைகள்...
என்று மறையும் இந்த செயல்கள்...

யார் தருவார் நீதி....

இனியாவது விழித்தெழு ,
துணிந்தெழு...

வழி முறை மாறும் கயவர்களை
கழி கொண்டு விரட்டு...

அளவற்ற வீரம் கொண்டு
அழித்திட முன்னேறி வா...

துணிந்து வா..!!! துணிவு கொள்...!!!
பெண் மகிமை உலகறிய....!!!

**லாபீர் பாத்திமா இபா**
ஏறாவூர்

## துரோகம்



வாழ்க்கையில் சிறந்த பாடங்களை
கற்று தருகிறது
துரோகம்....

எவரையும் அதிகமாக நம்ப
வேண்டாம்
யாரிடமும் அதிகம்
பாசம் காட்ட
வேண்டாம்
நமக்கு தெரிந்த
முகமே முதலில்
துரோகத்தை
காட்டி விடும் ....

ஒவ்வொரு நண்பர்களுக்கும்
ஒவ்வொரு தேவை
ஆகையால் யாரையும் நம்ப
வேண்டாம் ....

நண்பர்களின் துரோகம்
ஈட்டி போன்றது அது
குத்தும் போது
சுகமாகத்தான்
இருக்கும் சில
நொடியில் தான்
தெரியும் அதன் வலி....

நம் பிரச்சினைகளை
கடவுளிடம் மட்டும்
சொல்ல வேண்டும்
அவர் மட்டுமே நம்
கஷ்டங்களை
யாரிடமும் சொல்லி
சிரிக்க மாட்டார் ....

நம்மை நம்பியவரை
ஏமாற்றியதற்கு பெயர்
தந்திரமோ திறமையோ கிடையாது அதற்கு
பெயர் நம்பிக்கை துரோகம் ...

**அருலானந்தம் பிரகாஷ்**
கந்தப்பளை



## நின்று கொல்லும்

இரவோடு
இரவாக
துரத்துவதற்கு அதிகாரம்
யார் கொடுத்தது?

அந்த இரவின்
பிஞ்சுக் குழந்தைகளின்
கதறல்கள்,
கர்ப்பிணி பெண்களின்
வேதனைகள்,
தள்ளாடும் முதியோர்கள்,
படுக்கையில் கிடந்தவர்கள்,
இன்னும் இன்னும் பலர்
அவர்களின் கண்களுக்கு
விளங்காமல் போனது
எப்படி?

ஒருவர் பிறப்பிடம்
இறக்கும் வரை
அவருக்கு சொந்தமானது
இந்நியதி
சகலருக்கும் சமமானது

வெறி பிடித்தவர்களின்
ஆசைகளுக்கு நீதிகளும்
சக்தி இழந்தாகி விட்டன.

காலங்கள் கடந்தும்
துரத்தப் பட்டவர்கள்
அந்த வலிகளுடன்
ஏதோ வாழ்கிறார்கள்
துரத்தியவர்களோ? இன்று
முகவரியை தேடித் திரிகிறார்கள்.
தெய்வம் நின்று கொல்லும்
என்பது இதுதானா?

**ஏ எம் கஸ்புள்ளா .**

## மனிதர்களின் கதை

எரியும் வீட்டில்
தெரியும் பொருளை
தெரிந்தெடுப்பார்

பொதுச்சொத்தை தம் சொத்தாய்
கருதியே வாழ்ந்திடுவார்
பிறர் பயன்பாட்டை மறுத்திடுவார்

வேடங்கள் பல புனைவார் தமை
உத்தமராய் உலகிற்கு காட்டிடவே
தன் கடன் பிறர் பணிசெய்ய வாழ்வார்

மேடையில் புரட்சிப்பேச்சு
நிகழ்வுகள் முடிந்த பின்
பாடையில் போகும் அது

கொள்கைகள் பல
வகுத்திடுவார்
தம் பணியிடங்களில்

கொள்கைகளின்றி வாழ்வோர்

பிறர் நலன் கருதி வாழ்ந்திடார்
தன் நலன் பேணி வாழ்ந்திடுவார்
பொதுப்பணியிட திறைசேரிகளில்

நாடுகடன் என்று கதைப்பார்
வீதியில் கூட்டம் கூடி
தன் கடனை கொடுக்காதவர்

விலை உயர்வின் துன்பங்கள்
பகிர்வார்
நாட்டில் இல்லாத பொருள்
வீட்டில் சேமித்து வைத்திருப்போர்

**இணுவில் வாகீசன்**

## அச்சடிக்கப்பட்ட மனிதன்

நீ ஒரு மரமா?
உனது
முதுமையின் தேகவெளியில்
பட்டுப்போன கிளைகளாக
விழுந்து கிடக்கிறது
சுருக்கக் கோடுகளும்
பட்டினி ரேகைகளும்

நீ
கூலிக்குத் தேங்காய் உரித்து
பல
கண்டித்த காயச் சான்றிதழ்களையல்லவா
அடுக்கி வைத்திருக்கிறாய்
உள்ளங்கைகளில்

உனது மார்பின் வாசலில்
வியர்வைத்துளி ஓலைகளால்
நீ
உழைப்பாய் இலைத்த கிடுகுகளாலல்லவா
உன் முதலாளியின்
வருமானக் குடிசையின்
ஓட்டைத் துண்டுகளை அடைத்தது

சமுர்த்தி திட்டம்
உனக்கொரு முத்திரை தராமல் ஏமாற்றி
துயர முதியோர் இல்லத்தில்
உன்னை அடைத்துவிட்டது
இனியாவது கவனிக்கப்படுமா?
.
எனது கண்ணீர்
இன்னும்
ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது
உயிர் பிரிந்த உனது உடலை
நான்கு பேர்கள் மட்டும் வந்து
வேனில் வைத்து சுமந்து செல்வதை
.
உனது வரலாறு பல நூறு
அவமான அச்சு இயந்திரத்தில் வைக்கப்பட்டு –
பின்னர்
நசுக்கப்பட்டு இன்று
ஓர் துண்டுபிரசுரமாக வெளியிடப்படுகிறது
எனது கவிதையாக

**எம்.எம்.எம்.நகீபு**
சாய்ந்தமருது.

# ஓய்வு பெற்ற மிதாலிராஜுக்கு ஆளுநர் தமிழிசை பாராட்டு

**சர்வதேச போட்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்**



மகளிர் கிரிக்கெட் போட்டிகளில் நம் இந்தியாவுக்கு பெருமையை நிலைநாட்டிய அவருக்கு எனது மன மார்ந்த நன்றிகளையும், பாராட்டுக ளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெலுங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: 23 ஆண்டுகளுக்கும் மேலாக சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி மிளிரச் செய்த இந்திய அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர வீராங்கனை யுமான மிதாலி ராஜ் சர்வதேச போட் களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். மகளிர் கிரிக்கெட் போட்டிகளில் நம் இந்திய திருநாட் டின் பெருமையை நிலைநாட்டிய அவருக்கு எனது மனமார்ந்த நன்றி களையும், பாராட்டுகளையும் தெரி வித்துக் கொள்கிறேன். கொரோனா கால கட்டத்தில் தெலுங்கானா ராஜ்ப வனுடன் இணைந்து புலம்பெயர்ந்த வெளி மாநில தொழிலாளர்களுக்கு உணவளித்து தனது நாட்டுப்பற்றை வெளிப்படுத்தியதை இந்நேரத்தில் நினைவு கூறுகிறேன்.

# மூன்றாவது 20க்கு20 போட்டி இன்று பல்லேகலயில் ஆரம்பம்

## ஸ்டார்க் நீக்கம்

மூன்றாவது 20க்கு20 போட்டி இன்று 11ம் திகதி கண்டி – பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணிக்கு எதிராக நடைபெறவுள்ள மூன்றாவது 20க்கு20 போட்டியிலிருந்து அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் மிச்சல் ஸ்டார்க் நீக்கப்பட்டுள்ளார்.

மிச்சல் ஸ்டார்க் இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்ற முதல் 20க்கு20 போட்டியின் போது உபாதைக்குள்ளாகியிருந்த நிலையில், இரண்டாவது 20க்கு20 போட்டியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

முதல் 20க்கு20 போட்டியில் பந்துவீசிய போது ஸ்டார்க்கின் இடது கையின் ஆள்காட்டி விரல், அவருடைய பாதணியின் அடிப்பகுதியில் உள்ள கூர்மையான பகுதியில் பட்டு காயத்துக்குள்ளாகியது. குறித்த



போட்டியை முழுமையாக ஸ்டார்க் விளையாடிய போதும், பின்னர் காயம் ஏற்பட்ட பகுதியில் 6 தையல்கள் போடப்பட்டிருந்தது.

இரண்டாவது 20க்கு20 போட்டியிலிருந்து நீக்கப்பட்ட இவர், தற்போது மூன்றாவது 20க்கு20 போட்டியிலும் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மிச்சல் ஸ்டார்க்கின் காயம் குணமடைவதற்கு சுமார் 7 நாட்கள் வரை எடுக்கும் என வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே, எதிர்வரும் 14ம் திகதி நடைபெறவுள்ள முதல் ஒருநாள் போட்டியிலும் இவர் விளையாடுவதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளன. இதன் காரணமாக 20க்கு20 தொடரில் ஸ்டார்க்கிற்கு பதிலாக விளையாடிய ஜெய் ரிச்சட்சன் ஒருநாள் தொடருக்கான குழாத்திலும் உள்வாங்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியை பொருத்தவரை எதிர்வரும் 26ம் திகதி ஆரம்பிக்கவுள்ள டெஸ்ட் தொடருக்கான முக்கிய வீரர்களில் ஒருவராக மிச்சல் ஸ்டார்க் உள்ளார். எனவே, இவருடைய உபாதை தொடர்பில் அவதானம் செலுத்திவருவதுடன், டெஸ்ட் அணித்தலைவர் பெட் கம்மின்ஸ் ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் விளையாட இலங்கை வந்துள்ளார்.



கொழும்பில் நடைபெற்ற 20க்கு20 தொடரின் முதலிரண்டு போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்று தொடரை 2-0 என கைப்பற்றியுள்ளது.

# மைலோ கிண்ணம் 16: பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்து சுற்றுப்போட்டி பத்தரமுல்லையில்

மைலோ வெற்றிக் கிண்ணத்தை வெல்வதற்கான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை 12 ம்திகதி பத்தரமுல்லை புத்ததாச அரங்கில் இடம்பெறவுள்ளதுடன், 300 இற்கும் மேற்பட்ட மாணவிகள் இதில் பங்குபற்றவுள்ளனர். 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்துப் போட்டியில் முதல் 16 ஸ்தானங்களைப் பெற்றுள்ள பாடசாலைகள், இறுதிச்சுற்றில் மதிப்புமிக்க 'மைலோ வெற்றிக்கிண்ணத்தை' வெல்வதற்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நேருக்கு நேர் மோதவுள்ளன. தொற்றுநோய் பரவ ஆரம்பித்தமையால் 2 ஆண்டுகளாக ஒத்தி வைக்கப்பட்டிருந்த பாடசாலை வலைப்பந்தாட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க இந்த சுற்றுப்போட்டி உதவும் என்பதுடன், மாணவர்கள் தங்கள் வலைப்பந்தாட்டத் திறன்களை தேசிய மேடையில் வெளிப்படுத்தும் வாய்ப்பையும் வழங்குகிறது.

கல்வி அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வுக்கு, நாட்டில் அடிமட்ட விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தின் ஒரு பகுதியாக நெஸ்லே மைலோ அனுசரணையை வழங்கவுள்ளது. சிறுவர்கள் வாழ்க்கையில் மேலும் முன்னேறுவதற்கு ஊட்டமளிக்கும் ஒரு வர்த்தகநாமமாக, நெஸ்லே மைலோ 20 ஆண்டுகளுக்கும் மேலாக பாடசாலை மட்ட வலைப்பந்தாட்டத்தின் முன்னேற்றத்திற்கு ஆதரவளித்து வருகிறது.

16 முதல் 20 வயதுக்குட்பட்ட மாணவிகளைக் கொண்ட அணிகள் இச்சுற்றுப்போட்டியில் பங்கேற்கலாம் அதன்படி, 01.01.2006 முதல் 31.12.2003 வரை பிறந்தவர்கள் இதற்கு தகுதியானவர்கள். இதில் பங்கேற்கும் பாடசாலைகள் வருமாறு.

1. திருக்குடும்ப மகளிர் கல்லூரி, குருநாகல்
2. களுத்துறை மகளிர் கல்லூரி, களுத்துறை
3. மலியதேவ மகளிர் கல்லூரி, குருநாகல்
4. மியூசியஸ் கல்லூரி, கொழும்பு 7
5. தேவி பாலிகா கல்லூரி, கொழும்பு 8
6. திருக்குடும்ப கன்னியர் மடம், களுத்துறை
7. ஹில்வுட் கல்லூரி, கண்டி
8. விசாகா கல்லூரி, கொழும்பு 5
9. தர்மபால கல்லூரி, பன்னிப்பிட்டிய
10. உயர் கல்லூரி, கண்டி
11. ஹெலினா விஜேவர்தன கல்லூரி, களனி
12. கோதமி பாலிகா கல்லூரி, கொழும்பு 10
13. தர்மசோகா கல்லூரி, அம்பலாங்கொடை
14. புனித இருதய கன்னியர் மடம், காலி
15. பிரஸ்பைடிரியன் தேசிய பாடசாலை, தெஹிவளை
16. மகளிர் கல்லூரி, கொழும்பு 7

சுற்றுப்போட்டியின் முதற்சுற்று லீக் அடிப்படையில் நடைபெறும், அதைத் தொடர்ந்து நொக்அவுட் சுற்று நடைபெறும். ஒவ்வொரு அணியும் 16 மாணவிகளைக் கொண்டிருக்கலாம் என்பதுடன், முறையே அந்தந்த போட்டி தொடங்கும் முன் பெயர் பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு நாள் நிகழ்வாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், சுற்றுப்போட்டியின்மைலோ வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை, மாலை 3.30 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக கௌரவ கல்விப் பணிப்பாளர் (விளையாட்டு மற்றும் உடற்கல்வி) ஏ.டி.எம்.டி. பண்டார, உதவிக் கல்விப் பணிப்பாளர் (விளையாட்டு மற்றும் கல்வி) திருமதி வி. உபாலி அமரதுங்க மற்றும் நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன், விசேட விருந்தினராக அழைக்கப்பட்டுள்ள இலங்கை வலைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவியான கௌரவ திருமதி. விக்டோரியா லக்ஷ்மி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

# இந்தியாவுடனான முதல் ரி-20 போட்டி தென்னாபிரிக்க அணி அபார வெற்றி

இந்திய அணிக்கெதிரான முதலாவது ரி20 போட்டியில், தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் 10 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

டெல்லியில் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 211 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, இசான் கிசான்



76 ஓட்டங்களையும் ஸ்ரேயஸ் ஐயர் 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மஹராஜ், நோட்ஜே, பார்னல் மற்றும் பிரிடோரியஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 212 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி, 19.1 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், தென்னாபிரிக்கா அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ராஸ்ஸி வெண்டர் டுஸன் ஆட்டமிழக்காது 75 ஓட்டங்களையும் டேவிட் மில்லர் ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், புவனேஸ்வர் குமார், ஹர்சல் பட்டேல் மற்றும் அக்ஸர் பட்டேல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 31 பந்துகளில் 5 சிக்ஸர்கள் 4 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட டேவிட் மில்லர்தெரிவுசெய்யப்பட்டார்.



அம்பாரை மாவட்டத்தில் இயங்கி வரும் வோர்க்கஸ் யூனியனின் மற்றுமொர் சேவையாக ஒவ்வெரு வாரமும் இறுதி ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று நீர் பூங்கா வளாகத்தில் உடற் பயிற்சிக்காக வரும் நபர்களுக்கு யூனியனின் தலைவர் எம்.ஏ.ஜெயினுதீன்,செயலாளர் எம்.எப்.நழீர் ஆகியோர் தலைமையிலான குழுவினர் இலை கஞ்சி வழங்குவதைக் காணலாம்.

படம்: பாலமுனை தினகரன் நிருபர்

# ஜாவாலேன் அபாரவெற்றி

**வடகொழும்பு தினகரன் நிருபர்**

ஜாவாலேன் இலங்கை பொலிஸ் அணிகள் மத்தியில் இடம்பெற்ற கால்பந்தாட்ட போட்டியில் 02-01 கோல்கள் வித்தியாசத்தில ஜாவாலேன் அபாரவெற்றியை சுவீகரித்தது. மூன்று வருட இடைவெளிக்குப் பின் ஆரம்பமாகிய செம்பியன் லீக் கால்பந்தாட்ட போட்டிகள் மீண்டும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆரம்பமாகியுள்ள செம்பியன் லீக் கால்பந்தாட்ட போட்டியில் இலங்கையின் பிரபல கால்பந்தாட்ட அணிகளுடன் புதிய அறிமுக அணிகளும் மோதுவது இவ் லீக் போட்டியின் விசேட அம்சமாகும். இவ்லீக் சுற்றில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இலங்கையில் பெரும் பலம் கொண்ட கொம்பனித்தெரு ஜாவலேன் அணியுடன் இலங்கை பொலிஸ் அணி மோதியது.

ஆரம்பம் முதல் விறு விறுப்பாக இடம் பெற்ற இப்போட்டியின் 35ஆவது நிமிடத்தில் ஜாவாலேன் அணியின் தலைவர் நவீன் ஜுட் தனது அணிக்கான முதலாவது கோலை பெற்றார். போட்டியின் 86ஆவது நிமிடத்தில் ஜாவாலேன் அணியின் மற்றுமொரு வீரரான நைஜீரியா நாட்டைச் சேர்ந்த ஜானிக டொவிகுச் பிரான்சிஸ் ஒரு கோலை பெற்றார். இப்போட்டி நிறைவடைய 04 நிமிடங்கள் இருந்த தருணத்தில் பொலிஸ் அணியின் வீரரான தமித் பத்திரன தன் அணிக்கான ஒரு கோலை சுவீகரித்தார். இறுதியில் 0201 கோல்கள் வித்தியாசத்தில் ஜாவாலேன் இவ் லீக் சுற்றின் தனது அணிக்கான முதலாவது வெற்றியை கைப்பற்றியது. மாத்தறை கொட்டவல விளையாட்டரங்கில் இடம் பெற்ற மாத்தறை சிட்டி அணிக்கும் நிகம்பு யூத் அணிக்கும் மத்தியிலான போட்டியில் 02-01 என்ற கோல்கள் வித்தியாசத்தில் மாத்தறை சிட்டி அணி வெற்றி பெற்றது. மற்றுமொரு போட்டி குருநாகல் மாளிகாபிட்டிய மைதானத்தில் பெலிகன்ஸ் அணி எதிர் போருவள சுப்பர் சன் அணி மோதியது. இப்போட்டியின் 14, 83 ஆவது நிமிடங்களில் சுப்பர் சன் அணி வீரர் ஹசித பியங்கர 02 கோல்களை தன் அணிக்காக பெற்றார். பெலிகன்ஸ் வீரர் ஜெயகுமார் சாந்தன் ஒரு கோலை பெற 0201 என்ற நிலையில் சுப்பர்சன் வெற்றியை தனதாக்கிக் கொண்டது. இந்நிலையில் குருநாகல் மாணிகாபிட்டிய மைதானத்தில் நியூ ஸ்டார், கிறிஸ்டல் பெலஸ் அணிகள் மோதின. இப்போட்டியின் 65, 88 ஆவது நிமிடங்களில் நியூஸ்டார் அணியின் வீரர் கெலும் பியங்கர அபாரமான இரு கோல்களை பெற்று தனது அணியை வெற்றிபெற வைத்தார். இப்போட்டியில் கிறிஸ்டல் பெலஸ் அணி எவ்வித கோல்களையும் பெறாது தோல்வியை தொட்டது. மொரகஸ்முல்ல அணி எதிர் இலங்கை போக்குவரத்து அணி பெத்தேகம விளையாட்டரங்கில் மோதின இப்போட்டியின் போது இலங்கை போக்குவரத்து அணி எவ்வித கோல்களையும் போடாத நிலையில் மொரகஸ்முல்ல அணியின் வீரர்களான எரன்ந்த பிரசாத் 41 நிமிடத்தில் முதலாவது கோலை பெற்றார். டிலான் மதுசங்க 67 நிமிடத்திலும் 90 ஆவது நிமிடத்தில் மீண்டும் எரன்ந்த பிரசாத் ஒரு கோலை பெற்று 03 கோல்களால் மொரகஸ்முல்ல வெற்றியை பெற்றது.

# ஞானமுருகன் கால்பந்தாட்ட அக்கடமி அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது



**யாழ்.விளையாட்டு நிருபர்**

உரும்பிராய் திருக்குமரன் அக்கடமியினால் வடமாகாணரீதியாக நடாத்தப்பட்ட 13 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் ஞானமுருகன் கால்பந்தாட்ட அக்கடமி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் அக்கடமி அணியை எதிர்த்து ஞானமுருகன் அக்கடமி அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியிரும் தலா ஒரு கோல்களை பதிவு செய்ததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக பெனால்டி உதைகள் வழங்கப்பட்டது.

இதில் ஞானமுருகன் அக்கடமி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

வடமாகாணத்தில் முதன் முறையாக நடாத்தப்பட்ட இத்தொடரில் வடமாகாணத்தைச் சேர்ந்த 12 அக்கடமிகளின் 17 அணிகள் பங்குபற்றினது குறிப்பிடதக்கது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக உடற்கல்வி போதனாசிரியர் மா.இளம்பிறையன், சிறப்பு விருந்தினராக உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் ஜெகாந்தன், வைத்தியர் சக்திவேல் ஆகியோர் கலந்துகொண்டன.